சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பாலபாடங்களே

சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ௵ புரட்டாதி௴ ௫௳ (1942 செப்ரம்பர் 21 திங்கட்கிழமை) [இலக்கம் ௪௬ 45

திருக்கோவையாரின் உவமைச் சிறப்புக்கள்

[இது சென்ற சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களிலும் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நிகழ்த்தப்பட்ட திருக்கோவையார் விரிவுரை மகாநாட்டில் இப்பத்திரிகையின் துணையாசிரியர் திரு. க. கி. நடராஜன் அவர்கள் நிகழ்த்திய விரிவுரையின் சுருக்கம்.]

(முற்றொடர்)

2. முதலாவது இயற்கைப் புணர்ச்சி. அஃதாவது பற்பன் [illegible]ருயிரவர் கூர்வேலினோர் தற்சூழக் காட்டகத்தே வேட்டம்புக்க தலைமகனும், கண்ணும் மனமுங் கவரும் ஒண்ணுதன் மகளிர் பலர் தற்சூழச் சென்ற தலைமகளுந் தமியராய் ஒரு பொழில் விடத்தே எதிர்ப்பட்டுத் தெய்வ மிடைநிற்ப வூழ்வழியோடி ஓராவிற்கு இருகோடு தோன்றினாற் போலத் தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடுங் கூட்டமாகும். இதன்கண் தலைமகன் காட்சித் துறையி லீடுபடுஞ் செய்யுளை எடுத்துக் கொள்வாம். தலைவன் தலைவியை ஒரு மாலையாக உருவகிக்கிறான். மகளிரைக் கொடி யென்றுங் கொம்பென்றும் உருவகித்துக் கூறுவது மரபு. ஈண்டும் தலைவியை மாலையாக உருவகித்த ஆசிரியர், அவ்வுருவகத்துக்குப் பொருத்தமாக அம்மாலை— முகமாகிய தாமரையாலும், கண்களாகிய காவிகளாலும், நாசியாகிய குமிழ மலராலும், தனங்களாகிய கோங்கமலர்களாலும், கரங்களாகிய காந்தளாலும் யாக்கப்பட்ட மாலை என்கின்றார். இம்மலர்கள் ஐந்தும் வெவ்வேறாக வுள்ள ஐந்து நிலங்களுக்குமுரியவை. தாமரை மருதநிலப்பூ; நெய்தல் நெய்தனிலப்பூ; குமிழ் முல்லைநிலப்பூ; கோங்கு பாலை நிலத்துப்பூ; காந்தள் குறிஞ்சி நிலத்துப்பூ. இப்பூக்களனைத்தும் குறிஞ்சி நிலத்து நிகழும் புணர்ச்சியைச் சிறப்பிக்க வந்தன; ஒரு வீட்டிற் கலியாணம் நிகழ்ந்த விடத்து ஏனைவீடுகளி லுள்ள நகைகளும் அங்கு வந்து சேர்ந்து விடுவது போல. இச்செய்யுள் ஐந்திணையையுஞ் சுட்டுகின்றது. இது போலவே ஈற்றுச் செய்யுளும் ஐந்திணையையுஞ் சுட்டுதலைக் காணலாம். உரைகாரரும் "இப்பாட்டு ஐவகைத் திணைக்கும் உரித்தாகலிற் பொதுவகைத் தெனப் பெறும்" என்று கூறுகின்றனர்.

இச்செய்யுள் கூத்தர் கூற்றாகக் கூறப்பட்டது. இது தலைவனை வியந்து கூறலால் பிரிவிடைக் கூறப்படினும் அஃதாவது பரத்தையிற் பிரிவு என்னும் பகுதியிற் கூறப்படினும் எல்லாத் திணைக்குங் கொள்ளத் தக்கதாகும். அதனைத் தொல்காப்பியம் ஒப்புகின்றது.

"தொல்லவை யுரைத்தலும் நுகர்ச்சி யேற்றலும்
பல்லாற் றானும் ஊடலிற் றணித்தலும்
உறுதி காட்டலும் அறிவுமெய் நிறுத்தலும்
ஏதுவி னுணர்த்தலும் துணிவு காட்டலும்
அணிநிலை யுரைத்தலுங் கூத்தர் மேன"
என்னும் (தொல். கற்பியல் 27)

சூத்திரங் கண்டு கொள்க. இதுவேயுமன்றி, வேண்டாமைக் கொடுத்தலினாலே காராகவும், வேண்டக் கொடுத்தலினாலே கற்பகமாகவும், நண்ணிய கல்வியை யுடையவனாதலினாலே கற்றவர்க்கு நல்ல உசாத்துணையாகவும், இசையறிந்தவனாதலாலும் கெழுதகைமை வாய்ந்தவனாதலாலும் பாணர் ஒக்கல் (சுற்றத்தவன்) ஆகவும், நினைத்தது கொடுத்தலினாலே சீரையுடைய சிந்தாமணியாகவும், அணிதில்லைச் சிவனாது திருவடிக்கு (பொது நீங்கிச் சிறப்பான) தாராகி அச்சிவனா லணியப்படுங் கொன்றைப்பூவின் தன்மையை யுடையவனாகவும் (அஃதாவது இவனும் பொதுநீங்கிச் சிறப்பாக ஆட்கொள்ளப் பட்டவன் என்பது கருத்து) சான்றோர்தமக்குத் தொலையாத நிதியாயிருத்தலினாலே சங்கநிதியாகவும், நண்பர்க்கும் பகைவர்க்குந் தப்பாது பயன்கொடுத்தலினாலே விதியாகவும் சுற்றத்தவர்க்கு அவர் வேண்டியனவற்றை யெல்லாஞ் செய்ய விருத்தலினாலே அணிமையிலுள்ள ஊருணியாகவும், அதனால் வரைவின்றி எல்லார்க்கும் இவன் "பெறும் ஊதியம்" ஆகவும் உருவகிக்கப் பட்டிருக்கின்ற சிறப்பு நுனித்து நோக்கி மகிழத் தக்கது. இன்னும் இச்செய்யுளிற் சங்கநிதி யென்றமையால் நெய்தலும், சிந்தாமணி யென்றமையால் குறிஞ்சியும், ஊரன் என்றமையாலும் பாணர் ஒக்கல் என்றமையாலும் மருதமும், காருங் கொன்றையுங் கூறப்பட்டமையால் முல்லையும், இக்களவி பரத்தையர்ப் பிரிவால் உண்டாய வூடலைத் தீர்த்தற்குக் கூறப்பட்டமையால் பிரிவை உரிப் பொருளாகக் கொண்ட பாலையுஞ் சுட்டப்பட்டவாறு கண்டு கொள்க. பிறவாறுங்கூறுப. இங்ஙனம் விரிக்கவிரிக்க விரியும் ஆழமான பொருளைத் தரும் உவமையைக் கூறுதற்கு எத்துணைப் புலமை வேண்டும் என்பதுஞ் சிந்திக்கத் தக்கது. அதுமட்டோ, முதற்செய்யுளிற் கூறிய உருவகத்தால் ஒப்பாரும் மிக்காரு மில்லாத தலைவியின் பெற்றி தெரிக்கப்பட்டது. ஈற்றுச் செய்யுளில் வைத்த உருவகங்களாலே ஒப்பாரும் மிக்காரு மில்லாத தலைவனின் பெற்றி கூறப்பட்டது. என்ன அழகு பாருங்கள்! இனி முதற் செய்யுளின் கண்ணே ஐவகை நிலங்களுக்கு முரிய பூக்களால் யாக்கப்பட்ட மாலையாகத் தலைவியை உருவகப்படுத்தினர். ஐவகைப் பூவும் வெவ்வேறு மணத்தின. எனினும், அவையனைத்தும் ஒருமணம் வீசின என்கின்றார் ஆசிரியர். அஃது

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

கல்லும் சொல்லாதோ கவி

இயற்கை எத்தனையோ பல ஆண்டுகள் தவமிருந்து, ஒரு கலைஞனைப் பெற்றெடுக்கிறது என்று சொல்வதுண்டு. கலைஞனுடைய பிறப்புத் தத்துவத்தில் ஏதோ ஒரு அபூர்வ அமானுஷ்ய சக்தி இயங்கி நிற்கிறது என்றால் பொருந்தும்.

சிற்பம், இசை ஆகிய இரு உயர் தனிக் கலைகளும் தமிழ் நாட்டின் பண்டைச் செல்வங்களில் மிக வளமானவை. நமது சிற்பிகளும், இசைவாணர்களும் நாம் பெருமைப்பட வேண்டிய கலைச் செல்வர்கள். இச் செல்வர்களிடையே, சிற்பிகளும் இசைவாணரும் தவிர, சிற்பம் இசை ஆகிய இரு கலைகளிலும் ஒருங்கே தேர்ந்த சிற்ப இசைவாணர்களும் வாழ்ந்திருந்தார்கள் என்று அறிகிறோம். (இவர்களை இசைச் சிற்பிகள் என்றும் அழைக்கலாம்.) இவ்விசைச் சிற்பிகள் நிர்மாணித்துப் போன தூண்கள் தாம், இன்றும் தமிழ்நாட்டின் கோயில்கள் சிலவற்றுள் நின்று, பழம்பெருமைக்கு நம் சாக்ஷியம் கூறுகின்றன. கல்லினால் ஆன இக் கவிதைத் தூண்கள் ஒரு மாபெரும் அற்புதம். அந்த நாட்களில், திருவிழாக் காலத்து, பூஜைப் பொழுதில பக்தர் குழாம் மொய்த்துள்ள மணிமண்டபத்திலே, இசைவாணர்கள் தேவாரம், திருப்புகழ் முதலிய துதிப்பாடல்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" ஓதுவதுண்டு. அப்பொழுது அந்த துதி இசைக்குப் [illegible]பணி இசையாக இத்தூண்களின் இசை ஒலிக்கும். ஜலதரங்கம் வாசிப்பது போன்ற முறையில், சிறு மூங்கிற் கோலினால இத்தூண்களைத் தட்டி, உயர்ந்த முறையில பண்ணிசைக்கும் வல்லுநர் பலரும் அக்காலத்தில் இருந்தார்கள்.

கல்லினால் ஆன இசைத்தூண்கள் மதுரை, ஸுசீந்தரம், திருநெல்வேலி கிருஷ்ணாபுரம், முதலிய ஊர்க்கோவில்களில காணப்படுகின்றன, சில கோவில்களில் பூஜா மண்டபத்திற தவிர, நிருத்த மண்டபங்களிலும் இத தூணகள் நிற்கின்றன. பக்தியும் இசையுங்கூடி பெண்ணுருவில நாட்டியமாடும் புனித வேளையிலே, இந்த இசைத்தூண்கள் நவநவமான ஜதிகளை உகுத்திருக்கும் என்று ஊகிக்கலாம்.

அபூர்வம் பொருந்திய இத்தூண்கள் முதல் முதல் நிர்மாணிக்கப்பட்டது விஜயநகர ஆதிக்கத்தில்தான் என்று தெரிகிறது. அக்காலத்தில ஹம்பி முதலிய இடங்களில் நிறுவப்பட்ட இசைத்தூண்கள் மிகப் பிரசித்தமானவை. திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் மணி மண்டபத்திலுள்ள தூண்களும் கிருஷ்ணாபுரம் தூண்களும் வடிவ வாய்ப்பிலும் இசையொலிப்பண்பிலும் அருமையானவை. மதுரை மீனாக்ஷி அம்மன் கோவிலில் உள்ள ஆறு தூண்களில், இசை துலாம்பரமாய்த் துலங்கக்கூடிய தூணகள் நான்கு. இவற்றிலொன்றில் ஷட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், ப்ரதிமத்யமம், பஞ்சமம் ஆகிய ஸ்வரங்கள் ஒலிக்கின்றன. இவைகளடங்கிய கலவிசையின் ஒலிப்பதிவைச் செப்டம்பர் 22-ந் தேதி, திருச்சியில் நடக்கும் கல்லும் சொல்லாதோகவிதை என்ற நாடகத்தில் கேட்கலாம். சிற்பம் என்ற ஒரு அரிய கலையில் இசை என்ற மற்றொரு அரிய கலையைப் பிணைத்து, அவ்விரு கலைகளையும் ஒரு கலையாக உருவாக்கிய மஹா சிற்பியின் மனோ பாவத்தைச் சித்திரிப்பதே இந்நாடகத்தில் செய்யும் யத்தனம்.

ஸரஸ்வதியே கலைகளுக்கெல்லாம் தெய்வம் என்று முன்னோர்கள் வணங்கினார்கள். ஸரஸ்வதியின் அருளைப்பெறுவது மஹாபாக்கியம் என்றும், அந்த அருளைப்பெற்றவனே மஹா புருஷன் என்றும் அவர்கள் கருதினார்கள். ஸரஸ்வதி

இனிய தத்துவத்திலே மூழ்கித் திளைத்த கவிஞன்,

கோதகன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம்
கோவில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றுள்

இன்பமே வடிவாகிடப் பெற்றுள் என்று பாடியது இயல்புதான். இன்னும், ஸரஸ்வதியின் வரப்பிரஸாதத்தால் கல்லும் கூடக் கவிதை சொல்கிறது, என்றால் அது மிகப் பொருத்தமான உண்மையே.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்-
துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத
மும்துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி.
(ஸரஸ்வதி அந்தாதி)

கல்பேசுவதுபெரிதல்ல. பாடவே செய்யும். சாதாரணசிற்பியினுடைய கையிலே கல் பேசுகிறது. அசாதாரண மஹா சிற்பியினுடைய கையிலே, அவனது கையின் உளியிலே, கல் கவிதை சொல்கிறது. சொல்கிற கவிதையோ சாமான்யமானதில்லை. மதுராபுரி சொக்கநாதர் கவித்துவப் என்னும் மிகப் புராதனமான காப்புச் செய்யுளை நடன மெட்டில் உருவகம் செய்து, அந்த இசையின் எதிரொலியை அவன் வடித்த கல்லிலே கேட்கிறோம் — திருச்சியிலிருந்து செப்டம்பர் 22ந் தேதி இரவு 9 மணிக்கு.

வானொலி.

விஜய யோகம்

பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்
சுதுமலை

அத்தமனே சென்றற்பம் விண்ணிலே
சிந்து மீனினந் தெரியும் வேலை தான்
முந்து காரிய முழுதுநன்மையாம்
விந்தைமேவுசீர் விசயயோகமே.

என்னும் பிரமாணப்படி சூரிய அஸ்தமனத்திலிருந்து நட்சத்திரங்கள் அற்பமாகக்காணப்படும்நேரம் விசயயோகமென்றும் சொல்லப்பட்டிருத்தலினால் பொதுவாகக் கோதூளிகாலமும் அதுவேயாகும். கோதூளிகா காலமென்பதன் கருத்து என்னவெனின், சூரியகிரணகூட்டங்கள மேற்குதிக்கில் நிறைந்த சிவப்பு நிறமாகத்தோற்றுஞ் சமயத்தில் காட்டில மேயப்போன பசுக்கூட்டங்கள் புல் பூண்டாதி மூலிவகைகளை மேய்ந்து வீட்டிற்குத் திரும்புந்தருணத்தில் அவற்றின் கால்களிலிருந்து தூளிகள் எழும்புங் காலமாதலால் கோதூளிகா காலமென்று சாஸ்திரங்கள் கூறும்.

இந்தக் கோதூளிகா காலம் மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில சூரிய மண்டலம் மேற்கே ஒளி குறையக் காணப்படும் தருணமும், ஆனி, ஆடி மாசங்களில் சூரியமண்டலம் மேற்கில் பாதிமறைந்து காணப்படும நேரமும் சித்திரை, வைகாசி மாசங்களில் சூரியமண்டலம் காணாமல் மறைந்துபோகும் நேரமும், ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வேண்டுவன வேண்டாதன

[V. T. பிள்ளை அளவெட்டி]

(முற்றொடர்)

அதிகமாகப் பெண்களே இவ்வலங்காரங்களில் தலைசிறந்து விளங்குவர். இவர்களைப் பார்த்துப் பிற ஆடவர்கள் கண்காட்சியுறுவர். இவைகளை யெல்லாம் நின்று நேரில் பார்த்த ஆள் மாதிரிப் பட்டினத்தடிகள்,

"கச்சிற் கிடக்குங் கனதனத்திற்
கடைகண்கள் பட்டு
இச்சித்திருக்கின்ற ஏழைநெஞ்சே
இமவான் பயந்த
பச்சைப்பசுங்கொடி உண்ணாமுலை
பங்கர் பாதத்திலே
தச்சுக்கிட மனமே
ஒருகாலுந் தவறில்லையே"

என அறிவுறுத்தினார்.

பெண்களை நம்பலாகாதென்று உலகத்தவர்கள் தங்களுக்குள் நாடோடியாகச் சொல்லிக் கொள்வார்கள். வேதாந்தமும் பேசுவார்கள். ஆனால் அவர்களே சதமென்று சரணடைவோரும் பலர் உளர். இன்னும்,

"இல்லாளகத்திருக்க
இல்லாத தொன்றில்லை"

என்றும்,

"பாழே மடக் கொடியில்லா மனை"

என்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர். ஆனால் இவர்கள் கூறும் இலக்கிற்கு இலக்கான பெண்களை நாம் நம்பத்தான் வேண்டும்.

"தெய்வந்தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்றார் செந்நாப் புலவரும். இப்படியான கற்புடை மனைவியரும் வேண்டும் நம்முலகத்திற்கு. இல்லையேல் நம் உலகம் தலைசிறந்தோங்காது. காரைக்காலம்மையார் தமமுடைய வடிவத்தை மாற்றித் தாம் ஓர் பேய்வடிவாக வேண்டு என்றமென்று விரும்புகின்றார்.

ஓகோ! பெண்கள் அழகாயிருக்கப்படாதோ? எப்பொழுதும் பெண்கள் மேல் ஆடவருக்குப் பொறாமை தான் என்று சிலர் வாய் பொருமலாம். ஆனால் அவர்கள் ஒழுக்கமுடையவராய் இருந்தால் தங்களையீன்ற பதியரோடு இனிந்து சந்தோஷமடைவார்கள். அவ்வளவே சொல்லக்கூடிய சமாதானமுமாகும்.

சில ஆடவர்கள் தம் சொத்துக்கள் யாவையும் விற்று வேசியர்களுக்கு அளிக்கின்றனர். பிதா மாதாக்களால் தேடப்பட்ட சொத்துப் போக வரினும் கடன் வாங்கி அவர்களுக்குக்கொடுத்துத் தம்மையும் கெடுக்கின்றனர். "மைபரி மதர்த்த ஒண்கண் மாதரார் வலையிற் பட்டுக் கைபெரி சூலமேந்துங் கடவுளை நினையமாட்டேன்" என்றார் அப்பர் சுவாமிகளும்.

அவர்கள் இறைவனை வழிபடாது விடட்டும். தமக்கு முதற் கடவுளாக அமைந்த தாய் தந்தையரை யாகுதல நல்ல முறையில நடத்தினால் மனித சமூகமாகுதல் அவர்களை நன்குமதிக்கும். ஆனால், அவர்கள் அப்படியில்லை. எல்லாருக்கும் களைப்பட்டுத் தான் பணம் கொடுத்த பெண்ணினாலாதல் சுகம் பெறுவார்களோ வென்றால் அதுவுமில்லை. பட்டினத்தடிகள் இப்படியான சகோதரர்கள் பலரைக் கண்டிருக்கிறார் போலும்.

"நாவார வேண்டும் விதஞ்
சொல்லுவார்கள் உனைநான்பிரிந்தால்
சாவே னென்றேயிருந் தொக்கவுண்
பார்கள் கைதான் வரண்டால்
போய் வாருமென்று நடுத்தலைக்கே
குட்டும் பூவையர்க்
கேவார் தலைவிதியோ இறைவாகச்சி
ஏகம்பனே"

"……………………
……தினகந்தடி பொனறு
மாதுக கனிதனு மயக்கிடுவார்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வங்கியம்

சுவாமி—விபுலாநந்தர்

விஷு௵ புரட்டாசிமாதச் 'செந்தமிழ்' வெளியீட்டிலே 'எண்ணலளவை' என்னும் பொருள்பற்றிய உரையினை யெழுதியபொழுது அவ்வுரையிற் கண்ட முடிபுகள் இசைநூலாராய்ச்சிக்குப் பயன்படுதலை 'இசைக்கிரம'த்துப் பிற்பகுதியிலே காட்டுவாம் எனக் குறிப்பிட்டாம். சென்ற சில மாதங்களிலே இடமாற்றத்தினாலும் பிற காரணங்களினாலும் எழுதுதற்கு ஓய்வு கிடைத்திலது. எழுதத் தாமதித்தமையினால் ஏற்பட்ட குறையினைச் செந்தமிழன்பர்கள் மன்னிப்பார்களாக.

கணித முடிபுகள் நரம்புக்கருவிகளுக்குப் பயன்படுமாறு போலத் துளைக்கருவிகளுக்கும் பயன்படுவ. ஆதலினாலே, 'வங்கியம்' எனவும் வழங்கப்படும் குழற்கருவியினது துளையளவுகளைக் கொண்டு அக் கருவியிலே தோற்றுதற்குரிய இசைச்சுரங்களை அறிந்து கொள்ளலாம். அறிந்து கொள்ளும் வழியினை இவ்வுரையினுட் கூறுவாம்.

முதலிலே சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதையுரையினுள்ளே அடியார்க்கு நல்லார் கூறும் துளையளவிலக்கணத்தினை எடுத்துக் கொள்வாம்.

'நீளம் இருபது விரல்; சுற்றளவு நாலரைவிரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒருபாதி மாநிறுத்திக் கடைந்த வெண்கலத்தாலே அணைசபண்ணி இடமுகத்தை படைத்து வலமுகம் வெளியாக விடப்படும்......இனித் துளையளவிலக்கணம்: அளவு இருபதவிரல். இதிலே அம்புமுகத்தின் இரண்டு நீக்கி முதல்வாய் விட்டு இம் முதல்வாய்க்கு ஏழங்குலம்விட்டு வளைவாயினும் இரண்டு நீக்கி நடுவினின்ற ஒன்பது விரலிலும் எட்டுத்துளை விடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்த நீக்கி நின்ற ஏழிலும் ஏழுவிரல்வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலளவு கொள்ளப்படும்.'

ஓசையானது நம்மைச் சூழவிருக்கும் பவனத்தினைப் பற்றுக்கோடாகக் கொண்டு பரவுமிடத்து அலைவடிவாகப் பரவுமென்பது மேனாட்டு விஞ்ஞான நூலோர் ஆராய்ந்து கண்ட முடிவு. அலையின் முதல் நடு இறுதி பவனம் அமுக்கமுறும் இடங்கள். காற்கூறும் முக்காற்கூறும் பவனம் அகற்சியுற்று நிற்குமிடங்கள்.

அ— ஆ— இ— ஈ— உ

மேலே குறித்த ஐந்தெழுத்துக்களும் ஒத்த இடைவெளியினவாக அமைந்து நின்றன. அ இ உ என்னும் குற்றெழுத்துக்கள் பவனம் அமுக்கமுற்ற இடத்தில் நிற்பன. ஆ ஈ என்னும் நெட்டெழுத்திரண்டும் பவனம் அகற்சியுற்ற இடத்தில் நின்றன.

இடப்புறத்து முகம் அடைக்கப்பட்டு வலப்புறத்து முகம் திறந்திருக்கும் வங்கியத்திலே திறந்த வலப்புறத்து முகத்திலே பவனம் அகற்சியுற்று நிற்கும். அடைபட்ட இடப்புறத்து முகத்திலே பவனம் அமுக்கமுற்று நிற்கும். அமுக்கத்தை 'அ' என்னும் எழுத்தினாலும் அகற்சியை 'ஆ' என்னும் எழுத்தினாலும் குறிப்பிடும்பொழுது 'அ' அடைபட்ட முகத்திலும் 'ஆ' ஊதம்பிறக்கின்ற துளையிலும் நிற்கின்றன. இரண்டிற்கு மிடையேயுள்ள இடைவெளியானது இசையலையின் காற்கூற்றின் நீளமாகும். குழலின் முழு நீளம் இருபதுவிரல வளைவாயினின்று இருவிரல்கள் கழிந்த விடத்திலே முத்திரைத்துளை நின்றது; அதற்கு ஒருவிரல தாழ முதற்சுரந்தோன்றுந்துளை நின்றது. ஆதலினாலே அடைபட்ட இடைப்புற முகத்திற்கும் முதற்சுரந் தோன்றுந் துளைக்கும் இடைவெளி பதினேழுவிரல் என்பது பெறப்படுகின்றது. இது இசையலையின் காற்கூறு என மேலே குறிப்பிட்டாம். ஆதலினாலே இசையலையின் நீளம் ($17 \times 4 = 68$) அறுபத்தெட்டு விரல்களாகும். ஒரு விரல் இக்காலத்து ஆங்கிலேய நீட்டலளவையில் முக்கால் இஞ்சு ஆகும். 68 விரல் 51 இஞ்சு ஆகும். ஒரு செக்கண்டு எனப்படும் காலவெல்லையினுள்ளே எத்தனை அலைகள் தோன்றுகின்றன வெனக் கண்டால், அந்த அலைகளைத் தோற்றுவிக்கும் இசைச்சுரம் இதுவெனத் துணிதல் கூடும்.

ஓசையினுடைய வேகத்தினை விஞ்ஞானநூலோர் அளந்து அது ஒரு செக்கண்டுக்கு 1081 அடி எனக் கண்டிருக்கிறார்கள். வங்கியத்துளையிலே செக்கண்டு என்னும் கால வெல்லையின் தொடக்கத்திலே வெளிப்போந்த இசையலை 1081 அடிதூரஞ் செல்ல அக்காலவெல்லையின் இறுதியிலே தோன்றிய அலை துளைவாயிடத்திலே நிற்கும். இவ்வெல்லையினுள்ளே எத்தனையலைகள் உளவெனக் காண்பதற்கு 1081 அடியினை, அஃதாவது 12972 இஞ்சினை அலையின் நீளமாகிய 51 இஞ்சினாற் பிரிக்கவேண்டும். இப்படிப் பிரிக்கக் கிடைத்த பேறு 254 (மிச்சம் 18 இஞ்சு). ஆதலினாலே ஒரு செக்கண்டிலே அவ்விசைச் சுரத்திலே 254 அலைகள் தோன்றுகின்றன வென்பது முடிபாகிறது. சமன் தானத்திலே நிற்கிற ஷட்ஜத்தின அசைவெண் 256 எனமேனாட்டார் கூறுவர். இவ்வெண்ணுக்கும் நாம் கணித்துக் கண்ட எண்ணிற்கும் வேறுபாடு நூற்றுக்கு ஒரு வீதத்திற்றும் குறைவாதலினாலே அவை ஒன்றி நிற்பனவெனக் கொள்வோமாதலின் வங்கியத்திற்றோன்றும் முதற் சுரம் சமஷட்ஜம் எனப்பெற்றாம்.

இனி, ஏழாவது சுரத்தினைத்தருகிற துளையினை யெடுத்துக் கொள்வாம். அம்புமுகத்திலிருந்து இருவிரலில் முதலவாய் நிற்கும். இதிலிருந்து ஏழுவிரல்தூரத்திலே குறித்த ஏழாஞ்சுரத்தின் துளைநிற்கிறது. அம்புமுகத்திலிருந்து இதன் தூரம் ஒன்பதுவிரல். இது அச்சுரத்தின் இசையலையிற் காற்கூறாதலின் அலையின் முழுநீளம் 36 விரல், அஃதாவது 27 இஞ்சு. 12972ஐ 27ஆற் பிரிக்கக் கிடைப்பது 480 (மிச்சம் 12 இஞ்சு). இது சமன்தானத்திலுள்ள நிஷாதசுரத்தின் அசைவெண். ஷட்ஜமும் நிஷாதமும் இக்காலத்து மேனாட்டு இசைமரபிலுள்ள எண்களைப் பெறுவதால் நோக்குமிடத்து இருமரபிற்கும் அடிப்படையான தொடர்பு உளதென்பது முடிவாகின்றது.

இனி மேற்குறித்த வங்கியத்தினை அழுத்தமாக ஊதினால், அலையிடத்திலே பவனத்தின் அகற்சியும் அடைபட்ட முகத்திலே அமுக்கமும் அமைவதோடு இடையிலே மற்றோர் அகற்சியும் அமுக்கமும் அமைந்து தோன்றுகின்ற அலையானது அ— ஆ— இ— ஈ என்றபடி அலையின் முக்காற் கூறாகிற்கிறது. முதற்சுரத்திலே தோன்றும அலையின் முக்காற்கூற்றின் நீளம் 17 விரல ஆகின்றது. ஆகலின் முழுஅலையின்நீளம் $22\frac{2}{3}$ விரல். அஃதாவது 17 இஞ்சு. 12972ஐ 17 ஆற் பிரிக்கக் கிடைப்பது 763. இது முன்பு கிடைத்த அசைவெண்ணின் மும்மடங்கு. முன்பு பெற்றதனை 256 எனக் கொண்டமையினாலே இதனை $256 \times 3 = 768$ எனக் கொள்வாம். இது மேற்றானத்துப் பஞ்சமமாகும். இன்னும் அழுத்தமாக ஊதினால் அசை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழகதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஸ்ரீ
புரட்டாதி மீ ௫உ திங்கட்கிழமை

ஏது வருமோ அறிகிலேம்

உலகத்தவர்களெவரும் இப்பொழுது ருஷியாவின்பிரதான ஸ்தானமென்று சொல்லப்படும் ஸ்ரலின்கிருட்டில் நடக்கும் கோரமான சமரின் முடிவை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்களெனலாம். ஸ்ரலின்கிருட் ருஷியர் வசமிருந்து தவறுமானால் ருஷியருக்கும் அவர்க்குத் துணையாக நிற்கும் பிருத்தானியர் அமெரிக்கருக்கும் பெரும் வீழ்ச்சியாகுமென ஒருவாறு சொல்லுதலும் மிகையாகாது. ருஷியருடைய சிறந்த தொழிற்சாலைகளும் பிறவும் ஸ்ராலின்கிருட்டில் உள்ளனவாம். மேலும் ருஷியாவிற்கு நாலு வழியாலும் அது ஒரு மத்திய பாகமாம். யுத்தம் ஆரம்பித்து மூன்று வருடங்களாயினும் ஸ்ரலின்கிருட்டில் இப்பொழுது நடக்கும் கோரயுத்தம் போன்ற யுத்தம் முன்னர் வேறெந்த முனையிலும் நடந்ததில்லையெனச் சொல்லப்படுகின்றது.

ஜர்மனியர் ஸ்ரலின்கிருட்டானத்தின் மேற்குப்புறத்திலும் தென்மேற்குப் புறத்திலும் பெருந் தொகையான சைநியங்களையும், தாங்கிகளையும், தினந்தோறுங் கொண்டு வந்து நிறுத்திச் சமர் புரிகின்றார்களாம். ருஷியரின் எதிர்ப்புத் தேய்ந்து வருகின்றதாம். ருஷியருடன் யுத்தஞ் செய்யும்போது ஜர்மனியருடைய ஒரு அணி கொண்ட சைநியம் தோல்வியுற்றுப் பின் வாங்கினால் உடனே பகைவர் அந்தத் தானத்திற்கு இரு அணி சைநியத்தை அனுப்பி வைக்கின்றார்களாம்; பத்துத் தாங்கிகளை முற்பட விட்டவிடத்து அவை சிதைந்துவிட்டால், உடனே ஜர்மனியர் அந்த இடத்திற்கு 20 தாங்கிகளைச் செலுத்தி யுத்தஞ் செய்கின்றார்களாம்; இவை நிசமானால் ஜர்மனியர் குறித்ததானத்திற் செய்யுஞ் சமர் கோரமானதென்பது விளங்கக் கிடக்கின்றது.

ஸ்ரலின்கிருட்டின் வடமேற் பக்கத்தில் ஜர்மனியர் தம்மைப் பெலப்படுத்திக் கொண்டனரென்றும் பல இடங்களில் இரு பகுதியாருக்குமிடையிலே தெருச்சண்டை நடக்கின்றதென்றும் சில தெருவீதிகளை ஜர்மனியர்கைப்பற்றிக்கொண்டனரென்றும், தெருச்சண்டையிலும் பகைவர் 20 தாங்கிகளை ஒரு தெருவில் உபயோகித்துச் சமர்புரிகின்றனரென்றும் பிந்தி வந்த சமாசாரங்களைக் கொண்டு அறியலானேம். சில தானங்களில் ருஷியர் பகைவருடன் கடுஞ் சமர் புரிந்து தாம் முந்திப் பறிகொடுத்தவற்றைத் திருப்பிப் பிடித்தனரென்றுஞ் சொல்லப்படுகின்றது. எங்ஙனமாயினும், இப்பொழுது ஸ்ரலின்கிருட்டில் நடக்கும் கோரமான யுத்தத்தின் நிலைமையை நோக்குமிடத்து ஸ்ரலின்கிருட் யுத்தம் இந்தவாரம் இல்லையேல் அடுத்தவாரத்திற் கிடையில் ஒரு முடிவிற்கு வருமென யூகிக்கக் கிடக்கின்றது; ஸ்ரலின்கிருட் யுத்தம் ருஷியருக்கு அநுகூலமாய் முடிந்தால் நன்மையுண்டாகுமெனலாம்; பிரதிகூலமாக முடியுமேல், பின்னர் என்ன வருமோ அறிகிலேம்.

திருத் தணிகைத் திருவிருத்தம்

கண்டவர் களிக்குமுரு கேசவுன் பெருமையைக்
  கடவுட் சுனைக்குள் வளர்செங்
கல்லார முப்போது மலர்ந்து கமழ்தருங்
  கந்தமே தூதாயுலா
யெண்டிசையு ளார்க்குந் தெரித்தலாற் கொண்டாடி
  யெல்லாரும் வந்து தொழுதுன்
வின்னருளை மொண்டுண்ண விங்கேயின் யானொருவ
  விடரும் நினைப்ப தழகோ
வண்டர்க ணடுக்கமுற வாயிரத் தெட்டண்ட
  மாண்டிடு குரூர சூரன்
ஆண்மைதனை நீருக்கி யவனையிரு கூருக்கி
  யாட்கொண்ட சயசிங்கமே
தண்டையொடு கிண்கிணிகள் கொஞ்சுசெஞ் சரணனே
  சரவணேற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
  சகலபண் டிதராசனே.

இதன் பொருள்: தேவரீருடைய திருக்கோலத்தைத் தரிசிக்கும் அடியவர்கள் பக்திமேலீட்டினால் ஆநந்த முறுகின்ற முருகேசப்பெருமானே; தேவரீருடைய திருவருட்டிறத்தை, இத்திருத்தணிகைப் பதியிற் பொருந்திய தெய்வத் தன்மை வாய்ந்த பொய்கையின் கண்ணே வளர்கின்ற சிறந்த நீலோற்பலங்கள் மூன்றும் காலை உச்சி மாலை யென்னும் முப்போதும் பூத்துக் கமழும் வாசனையே தூதாகப் பரந்து சென்று எட்டுத் திசைகளிலும் உள்ளார்க்குப் புலப்படுத்துதலால், எல்லோரும் ஒருங்கு சேர்ந்து இங்கு வந்து தேவரீரை வணங்கித் தேவரீருடையஇகந்தருந்திருவருளைப்பூரணமாகப் பெற்று அதிற்றிளைக்க, தமியேன் மாத்திரம் என்னைப்பீடித்த இக்கன்ம வியாதியில் அகப்பட்டு வருந்துவது தேவரீருடைய திருவருட்டிறத்திற்கு முறையாகுமோ? அரிபிரமேந்திராதி தேவர்கள் அச்சமேலீட்டினால் நடுக்கங் கொள்ள ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசாண்ட கொடியவனுகிய சூரபன்மனிடத்துள்ள ஆற்றலைத்துகளாக்கி, அவனுடைய வச்சிரயாக்கையை வேற்படையினால் இருபிளவாகக் கிழித்து அவனை ஆட்கொண்டருளிய திருவருள் வெற்றியோடு கூடிய சிங்கமே, தண்டை கிண்கிணி யென்னும் அணிகள் தழுவிய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளையுடையவரே, சரவணபவரே, குமாரத்தெய்வமே, திருத்தணிகாசலம் என்னும் இத்தலத்திற் சாந்நித்தியமாகக் கோயில் கொண்டருளியவரே! பரமேசுவரன் திருவுளம் விரும்பிக் கேட்ப அப்பெருமான் திருச்செவியிற் பிரணவப் பொருளை உபதேசித்தருளியவரே! சகல கலைகளிலும் வல்ல புலவர்கட்குத் தலைவராக விளங்கும் பெருமானே, என்றவாறு.

கல்லாரம்-நீலோற்பலம்; திருத்தணிகைத் தலத்தின் கண்ணேயுள்ள தைவிகம் வாய்ந்த சுனையில் இந்திரன் அங்குக் கோயில்கொண்டருளிய முருகக்கடவுளுக்கு முப்போதுஞ் சாத்துதற்பொருட்டு மூன்று நீலோற்பலத்தை முன்னர் வைத்தானென்றும், அவை மூன்றும் காலையிலொரு மலர் உச்சிக்காலத்திலொருமலர் மாலையில் ஒரு மலராக மூன்று மலர்களைத் தவறாது அலர்வனவென்றும் சொல்லப்படும். இதனைக் கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலத்தில் "....வாசவன் வைகலுஞ் சாத்துதற்பொருட்டால், மூன்று காவியை இச்சுனைதனிலெமக்கு முன் வைத்தான்" எனவும்,

"காலைப்போதினிலொருமலர் கதிர்முகிருச்சி
வேலைப்போதினிலொருமலர் விண்ணெலாமிருள் சூழ்
மாலைப்போதினிலொருமலராக விவ்வரைமேல்
நீலப்போது மூன்றொழிவின்றி நிற்றலுமலரும்"

எனவும் தணிகைப்பெருமான் வாக்காகக் கந்தபுராணத்தில் வருந் திருவிருத்தங்களானுணர்தலாகும். பேரபராதஞ்செய்த சூரன்பதுமன் சிங்கன் தாரகன் என்னும் பூதத்தலைவர் நால்வரையும் முருகக்கடவுள் அசுரராகக் கடவீர்எனச் சபித்தபோது, அந்நால்வரும் அப்பெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து பன்முறை வணங்கி "சுவாமீ, தேவரீர் இப்பொழுது இட்ட சாபங்காரணமாக நாம் அசுரராகப் பிறந்து மயங்கி இடருறுங்காலத்துத் தமியேங்களைத் தேவரீரே வந்து ஆட்கொண்டருளவேண்டும்" என இரத்தலும், கருணாநிதியாகிய முருகக்கடவுள் அங்ஙனஞ் செய்வேமெனத் திருவாய்மலர்ந்து பின்னர் ஆட்கொண்டருளினாராதலின் "ஆட்கொண்ட சயசிங்கமே" எனக் கூறினர்.

இவற்றை

'என்னுங் கடுஞ்சாபங் கேளா விகந்பூதர்
மின்னுஞ்சுடரிலை வேள்வேலோற் பதம்போற்றி
மன்னுங்கொடியேம் நிருதர்குலம் வைகுறினும்
நின்னன்பகலாத நெஞ்செமக்கு வேண்டுமால்"

"ஈதன்றி மற்றொன் றுளதால் எளியோங்கள்
போதுங்குலத்துப் புரிதவத்தால் கெட்டிலைவேல்
காதுந்திறத்திறக்குங் காலை மயிலாகிப்
பாதம்பொறுக்கக் கொடியாகப் பாலிப்பாய்"

என உபதேசகாண்டத்து வருந் திருவிருத்தங்களானும்,

"ஆட்படு நெறியிற் சேர்த்தும் ஆதியின் ஊழ்தந்துய்க்கத்
தாட்படை மயூரமாகித் தன்னிகரில்லாச்சூரன்
காட்படையுளத்தனுகிக் கடவுளர் இரியல்போக
ஞாட்பியல் செருக்கின்வந்தான் ஞானநாயகன்றன் முன்னம்"

எனவருங் கந்தபுராணத்திருவிருத்தத்தில் "ஆட்படுநெறியிற் சேர்க்கும் ஆதியினூழ்தந்துய்ப்ப" எனக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் எடுத்துக்காட்டிய குறிப்பினாலும் உணர்க.

இது ஆசிரியர் தம்மைப்பீடித்த நிராகரோயைத் தீர்த்தருள வேண்டுமெனத் திருத்தணிகைப்பெருமானை இரந்தவாறும். (ச)

இரு நாசகாரிகள் இழக்கப்பட்டன

லண்டன் செப் 16—

சமீபத்தில் டோபுருக்கிற் கருகில் நடைபெற்ற நடவடிக்கைகளில் 'சீக்' 'ஸூலு' என்ற இரண்டு பிரிட்டிஷ் நாசகாரிகள் மூழ்கடிக்கப்பட்டதாகக் கடற்படை இலாகா அறிவிக்கிறது. கப்பல்களில் இருந்தவர்களில் பெரும்பான்மையோர் காப்பாற்றப்பட்டனர்.

'சீக' என்னும் நாசகாரி மூழ்கடிக்கப்படும் பொழுது டோபுருக்கிற்கு மிகச் சமீபத்தில்இருந்தது. அதிலிருந்தவர்கள் பத்திரமாகக் கரை சேர்ந்திருக்கக் கூடும்.

பழைய சென்னைத் தேசாதிபதியின் அனுபவம்

எர்ஸகின் பிரபுவின் கடிதம்

லண்டன் செப் 16—

லேர்ட். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் மகாத்மா காந்தி தான் தனது தூது முடிவதற்குக் காரணம் என்று சொல்லியதை அனுசரித்துத்தனக்கும் இவ்வித அனுபவமுண்டு என்று எர்ஸகின் பிரபு சொல்லுகிறார். 'டைம்ஸ்' பத்திரிகைக்கு எழுதிய கடிதமொன்றில் தான்சென்னைத் தேசாதிபதி யாயிருக்கும் காலத்தில் திரு. இராஜ கோபாலாச்சாரியார் மந்திரி பதவியை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தபோழுது அதைத் திடீரென மாற்றும்படி மகாத்மா காந்தி செய்து விட்டார் என்று அவர் புதியதொரு விஷயத்தை வெளியிட்டிருக்கிறார். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தையும் 1935-ம் வருடத்திய சீர்திருத்தத்தையும் இந்தியா ஒப்புக்கொள்ளும்படி காந்திஜி தனது செல்வாக்கை உபயோகித்திருந்தால் இந்தியாவிற்கு இப்பொழுது குடியேற்ற நாட்டந்தஸ்து கிடைத்திருக்குமென்று அவர் கூறுகிறார்.

'நீதிஸ்தல வசதியைப் பொருட்படுத்துவதில்லை'

பொலீஸாரின் நடத்தைபற்றி நீதிபதி குறிப்பு

கொன்ஸ்டபிளுக்கு வாறண்ட்

யாழ்ப்பாணம் செப் 15—

ஊர்காவற்றுறைப் பொலீஸைச் சேர்ந்த பொலீஸ் சார்ஜன் சேனாதனுவும் ஐயுர்தீன், பண்டா என்னும் இரு கொன்ஸ்டபிள்களும் தமது வளவுக்குள் எல்லை மீறிப் புகுந்து தமக்குக் காயம் விளைத்தனரென்று குற்றஞ்சாட்டி நாரந்தனை வாசியான வேலுப்பிள்ளை ஆறுமுகந் தொடர்ந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதுகாலை எதிரிகளுள் ஒருவராகிய ஒரு கொன்ஸ்டபிள் சமுகமாகவில்லை என்று நீதிபதி மிஸ்டர். குவிண்டன் பேர்ணுண்டோவுக்கு அறிவிக்கப்பட்ட பொழுது யாழ்ப்பாண டிஸ்திரிக் பொலிஸார் நீதிஸ்தலத்தின் வசதியைச் சிறிதும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை யென்று குறிப்பிட்டார்.

இரண்டாவது எதிரி இப்பொழுது பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்தில் வேலை பார்த்து வருவதாகவுஞ் சில கைதிகளை இந்தியாவுக்குக் காவலிற் கொண்டு சென்றதனால் அவர் சமுகமளிக்கவில்லையென்றும் முதலாவது எதிரி நீதிஸ்தலத்தில் தெரிவித்துக் கொண்டார்.

முன்னொரு முறையும் இரண்டாம் எதிரி நீதிஸ்தலத்தில் சமுகமாகவில்லை யென்று ஊர்காவற்றுறை நீதிபதி அவர்மீது வாறண்ட் பிறப்பித்ததாகவும், மறு விசாரணையின்போது எதிரி நீதிஸ்தலத்தில் சமுகமளித்ததாகவும் அன்றைய தினம் அவர் இந்த விசாரணையின்போது நீதிஸ்தலத்தில் சமுகமளிக்க எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும், அப்படியிருந்தும் எதிரி நீதிஸ்தலத்தில் சமுகமளிக்கவில்லை என்று வழக்காளி பக்க வழக்கறிஞர் நீதிஸ் தலத்தில் தெரிவித்தார்.

அப்பொழுது நீதிபதி மிஸ்டர் குவிண்டன் பேர்ணுண்டோ குறிப்பிட்டதாவது:-

இது பொலீஸாரின் நன்னடத்தைக்கு உசிதத்தல்ல. யாழ்ப்பாணம் டிஸ்திரிக் பொலீஸார் தங்கள் அலுவல்களைச் சரிவரக் கவனிப்பதில்லை. இதுதான் பொது ஜனங்கள் அவர்கள்மீது கூறுங் குறைப்பாடு, அவர்கள் நடத்தை மிகவும் மோசமாகிக் கொண்டு வருகிறது. நீதிஸ்தலத்தின் வசதியை அவர்கள் சற்றுங் கவனிப்பதாகத் தெரியவில்லை.

இவ்வழக்கில் கொன்ஸ்டபிள் ஜபாதீன் எதிரி யென்பதை பருத்தித்துறைப் பொலீஸ் நிலையச் சப் இன்ஸ்பெக்டருக்குத் தெரியுமா என்பதையும் எதிரியைக் கைதிகளுடன் இந்தியாவுக்கு அனுப்பிய பொழுது எதிரி வழக்கு விஷயத்தைச் சப் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவித்துக் கொண்டாரா வென்பதையும், டெலிபோன் மூலம் பருத்தித்துறைப் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டரிடம் இருந்து கேட்டறியுமாறு பிரதம கிளாக்கை நீதிபதி கேட்டுக் கொண்டார். வழக்கு விசாரணைத் தினம் எதிரிக்குத் தெரியாதென்றும், எதிரி இந்தியாவுக்குச் செல்லவில்லையென்றும், நீதிஸ்தலத்தில் சமுகமாவதற்காக இப்போது தான் பொலீஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டதாகவும் பருத்தித்துறைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் பதிலளித்ததாகப் பிரதம லிகிதர் நீதிபதியிடம் தெரிவித்தார்.

இரண்டாம் எதிரியை 21-ந் திகதியன்று நீதிஸ்தலத்திற் சமுகமாகுமாறு நீதிபதி வாறண்ட் பிறப்பித்தார். இரண்டாவது எதிரி சமுகமாகாதது பற்றி ஏன் உண்மையான தகவல் அறிவிக்கவில்லை என்பதற்குக் காரணங்காட்டுமாறு முதலாம் எதிரிக்கு உத்தரவிடப்பட்டது.

இந்தியத் துருப்புகளுக்கு ஹிதோபதேசம

'இலங்கை மக்களுடன் ஐக்கியமாக விருங்கள்'

"இந்நாட்டு மக்களுடன் பழகிக் கொள்ளுங்கள் அவர்களுடன் ஐக்கியமாக விருங்கள். உங்களுடைய வீடுகளுக்குச் சமீபத்திலுள்ள துருப்புகள் உங்கள் தேசத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டு மென்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதே போல் இந்நாட்டுப் பண்ணைகள் கிராமங்கள், ஸ்திரீகள் விஷயத்திலும் நீங்கள் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளுங்கள்."

இலங்கைப் பிரதம தளகர்த்தரான மேன்மை தங்கிய அட்மிரல் சர்ஜியோவ்ரே லேட்டன் நேற்றைய தினம் ஓர் இந்தியப் பட்டாளத்தினருக்குப் பிரசங்கம் செய்கையில் மேற்கூறியவாறு குறிப்பிட்டார். இப்பட்டாளம் இலங்கையிலுள்ள மிகச் சிறந்த இந்தியப் பட்டாளங்களிலொன்றாகு மென்று அவர் கூறினார்.

பிரதம தளகர்த்தர் துருப்புக்களையும் இராணுவ அதிகாரிகளையும் பார்வையிட்டார். துருப்புகள் அணிவகுத்துச் சென்று அவருக்கு மரியாதை செலுத்தின. ஓர் ஆங்கில அதிகாரர் ஸோ. லேட்டனின் சொற்பொழிவை இந்துஸ்தானி பாஷையில் மொழி பெயர்த்தார்.

மேலும் ஸோ. லேட்டன் பேசியதாவது:-

உங்கள் பட்டாளமொன்று நான் விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். இப்பட்டாளம் தமது சிறந்த முன்னோரின் பாரம்பரியத்தைக் கைவிடாது நல்ல முறையில் நடந்து வருகிறது.

இப்படிப்பட்ட சிறந்த பட்டாளத்தி லிருப்பது உங்களுக்குப் பெருமையாகும். இப்போதைய யுத்தத்தில் இந்தியத் துருப்புகள் ஆபிரிகா, லிபியா, பர்மா மலேயா முதலிய நாடுகளில் போராடின. இத்துருப்பினர் யுத்தத்தில் அதிக திறமையுடன் சண்டை செய்தனர்.

சாரதித் தொழிற் திறமை

இப்பொழுது சத்துருவுடன் உங்களுக்குத் தொடர்பில்லாமையால் ஜபபனியரைத் தாக்கும் பொருட்டு நீங்கள் பயிற்சி பெற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் மோட்டார் வாகனங்களைச் செலுத்தும் பொருட்டுத் திறமையடைய வேண்டும். எப்பொழுதும் போர்வீரர் போல் நடந்து கொள்ளுங்கள்.

உங்கள் பிரதம தளகர்த்தரென்ற முறையில் நான் உங்கள் எதிர் கால விருத்தியைக் கவனித்து வருவேன்.

புதிய விலைக் கட்டுப்பாடு

மிளகாய், வெள்ளைப்பூடு மஞ்சள், சுக்கு

செப் 20—

நேற்றைய கசெற்றில் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி பின்வருஞ் சாமான்களுக்கு மொத்தவிலை ஆனதென்றும் சில்லறைவிலை இன்னதென்றும் கட்டுப்பாட்டு விலையைக் குறித்து வெளிப்படுத்தியிருக்கிறார்:

செத்தல் மிளகாய்:- இறக்குமதி செய்பவரின் மிகக்கூடின விலை 525 றாத்தல் கொண்ட கண்டி ஒன்றுக்கு ரூ 189. மொத்தவிலைக்கு விற்கும் போது மிகக் கூடின விலை 525 றாத்தல் கொண்ட கண்டிக்கு ரூ 193 சில்லறைக்கு மிகக் கூடின விலை றாத்தல் ஒன்றுக்கு சதம் 42

வெள்ளைப்பூடு:- இறக்குமதி செய்பவரின் மிகக் கூடின விலை 525 றாத்தல் கொண்ட கண்டி ஒன்றுக்கு ரூ 72. மொத்த விலைக்கு விற்கும் போது 525 றாத்தல் கொண்ட கண்டி ஒன்றுக்கு ரூ 73. சதம் 50. சில்லறைக்கு விற்கும்போது மிகக் கூடிய விலை றாத்தல் ஒன்றுக்கு சதம் 17.

மஞ்சள்:- இறக்குமதி விலை (மிகக்கூடியது) 525 றாத்தல் கொண்ட கண்டி ஒன்று ரூபா 73. சதம் 50 மொத்தவிலைக்கு விற்கும் போது (மிகக்கூடியவிலை) 525 றாத்தல் கொண்ட கண்டி ஒன்று ரூ 75 சில்லறைக்கு விற்கும்போது மிகக் கூடிய விலை றாத்தல் ஒன்று 16½ சதம்.

சுக்கு:- இறக்குமதி விலை (மிகக் கூடினவிலை) 525 றாத்தல் கொண்ட கண்டி ஒன்று ரூ. 452. மொத்த விலைக்கு விற்கும்போது அதே கண்டி ரூ 464 சில்லறைக்கு விற்கும்போது றாத்தல் ஒன்று ரூ 1.

கிராமத் தலைமைக் காரர்கள்

60 வயதில் கட்டாயமாக ஓய்வு பெறவேண்டும்

அரசாங்க இலாகாக்களில் உபகாரவேதனம் இல்லாமல் மாதாந்த தினசரிச் சம்பளம் பெறுபவர்களில் ஐம்பது வயதானவர்களினதும் அதற்கு அதிகமான வயதானவர்களினதும் பெயர்கள் அட்டவணையொன்று அரசாங்க இலாகாக்களில் தயாரிக்கப்பட்டு வருகிறது. அரசாங்க சேவையிலுள்ள உபகாரவேதனம் இல்லாத எல்லா ஊழியர்களுக்கும் உபகாரவேதனம் வாங்குபவர்களைப்போல 55 வயதில் இஷ்டப்பட்டால் வேலையிலிருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்ளலாமென்றும் 60 வயதில் கட்டாயமாக வேலையிலிருந்து விலகவேண்டுமென்றும் புதிய முறை கொண்டுவரப்பட்டிருப்பதே இதற்குக் காரணமென்று தெரியவருகிறது.

சிலகாலத்துக்கு முன்பு நடைபெற்ற அரசாங்க மாகாணத் தலைவர் மகாநாடு தலைமைக்காரர்கள் 55 வயதானவுடன் 'அலவன்சுடன்' வேலையிலிருந்து விலக அனுமதிக்கும்படி உபகாரவேதன விதிகள் மாற்றப்படவேண்டுமென்று சிபார்சு செய்ததற்கிணங்க அரசாங்கம் இம்முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

தலைமைக்காரர்களுக்கு இதுவரை வயது நிர்ப்பந்தம் இல்லாததால் அவர்கள் 55 வயதான பிறகும் வேலையிலிருந்து விலகாமல் தொடர்ந்து வேலைசெய்து வருகிறார்களென்று தெரிகிறது.

அரசாங்கத்தார் இவ்விஷயமாக ஆலோசித்து ஒரு விசாரணை நடத்தினார்களென்று தெரிகிறது. அதன் பிறகுதான் அரசாங்கத்தில் உபகாரவேதனம் வாங்காத மாதாந்த தினசரிச் சம்பளகாரர்கள் 60 வயதில் கட்டாயமாக வேலையிலிருந்து விலகவேண்டுமென்றும் இஷ்டப்பட்டால் 55 வயதுக்குப்பிறகு விலகிக்கொள்ளலாமென்றும் விதி ஏற்படுத்த முடிவு செய்திருக்கின்றனர்.

வாடகை அதிகப்படுகின்றது

இலங்கையில் வியாபாரத்தையும் மற்றும் தொழில்களையும் நடத்திச் சென்ற ஏப்ரல் மாதம் தமது தொழில்களை விட்டுச்சென்ற பலர் இப்பொழுது இங்குத் திரும்பி வந்து தமது பழைய ஸ்தலங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளும்பொருட்டு நிலச்சுவான்தார்களுக்குக் கூடுதலான வாடகைகளைக்கொடுக்க முன்வந்திருப்பதாயும் குறித்த ஸ்தலங்களில் இப்பொழுது தொழில்களை நடத்துபவர்களை அவ்விடங்களிலிருந்து துரத்த அவர்கள் முயலுவதாயும் பொதுசனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விண்ணப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

முன்னர் வியாபாரத்தை நடத்திவிட்டுவெளியேறியவர்களின் ஸ்தலங்களில் இப்பொழுது தொழில் நடத்துபவர்கள் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கிப் பொதுமக்களின் நலனுக்கே அத்தியாவசியவியாபாரத்தை நடத்தி வருவதாகவும் குறித்த விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் அதிகாரிகளிடம் புகார் செய்திருக்கின்றனர்.

அதிகாரிகளின் கடமை

நெருக்கடியேற்பட்டுள்ள ஓர் விசேஷ நிலைமையின்போது அரசாங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி ஓர் வகுப்பினர் புதியதொழிலில் ஈடுபட்டிருப்பதை முன்னிட்டு இவர்களின் நலனைப் பாதுகாப்பது அதிகாரிகளின் கடமையாகுமென்று வற்புறுத்தப்படுகிறது. வியாபாரம் ஸ்தாபித்துவிட்ட சமயத்தில் தமது ஆதாயத்தைவிடப் பொதுமக்களின் நலனையே மிகக் கருதி இவர்கள் புறக்கோட்டை, முதலிய இடங்களில் வியாபாரத்தை நடத்த முற்பட்டதாகவும் வற்புறுத்தப்படுகிறது.

இந்நிலைமையில் பழைய வியாபாரிகள் புதிய வியாபாரிகளைத் துரத்திவிடும்பொருட்டுக் கட்டிட வாடகைகளை யுயர்த்தவும் தாம் தொழில் நடத்த முயலுவதையும் தடுக்கு முகமாக அதிகாரிகளைத் தலையிடும்படி கோரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தாம் ஏராளமான பொருளைச் செலவு செய்து வியாபாரத்தை நடத்தி வருவதால் புதிய வியாபாரிகளின் தொல்லை காரணமாகக் கட்டிடங்களின் முதலாளிகள் வாடகையை அதிகரிக்கும் பட்சத்தில் தமக்குப் பலத்த நஷ்டமேற்படுமென்றும் சொல்லப்படுகிறது.

சவர்க்காரத்தின் ஆகக்கூடுதலான விலைகள்.

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சவர்க்காரங்களுக்கு ஆகக் கூடுதலான விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. பெட்டி ஒன்றுக்கு ஆகக்கூடுதலான சில்லறை விலைகள் ரூ 1·26 முதல் 54 சதம் வரையுமுண்டு.

40 இரண்டரை றாத்தல் கட்டிகளடங்கிய அல்லது 50 இரண்டு றாத்தல் கட்டிகள் அடங்கிய பெட்டி ஒன்றுக்கு ஆகக் கூடுதலான மொத்த விற்பனை விலை ரூ 21-20 சதமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகக்கூடுதலான சில்லறை விலை ஒரு அவுன்ஸுக்கு 1¼ சதமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தேங்காய்ப்பிண்ணாக்கின் ஆகக் கூடுதலான விலை ஒரு டன்னுக்கு 32 ரூபாயும் ஒரு அந்தருக்கு ரூ 1-90 சதமும், ஒரு றாத்தலுக்கு 2 சதமுமாகக் கட்டப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதன்படி யாழ்ப்பாணம் பெரிய கடையில், சன்லைற்கட்டி 14 சதமாகவும் லக்ஸ் 1 கட்டி 20 சதமாகவும் விற்கப்படுகின்றன என அறியலானேம்.

மடகாஸ்கரில் யுத்தம் ஓயவில்லை

பிரிட்டிஷ் சமாதான நிபந்தனைகள் நிராகரிக்கப்பட்டன

விச்சி செப் 18—

மடகாஸ்கரின் கவர்னர் ஜெனரல் எம் அனெட் பிரிட்டிஷ் சமாதான நிபந்தனைகளை நிராகரித்து விட்டதாகக் குடியேற்ற நாட்டுக் காரியாலய அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறது. அவ்வறிக்கை கூறுவதாவது:—

மடகாஸ்கரில யுத்தத்தை நிறுத்துவதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தக் கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் அரசாங்கத்தை அணுகினார் பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்த நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக இருந்தபடியால், முடிவொன்றும் எடுக்கப்படவில்லை. தன்னால் இயன்றமட்டும் தீவைப் பாதுகாக்கத் தேசாதிபதி ஜெனரல் முடிவு செய்திருக்கிறார். இவ்விஷயமாக வெளிநாடுகளிலிருந்து வரும் தகவல்கள்பற்றி ஜனங்கள் கவனமாக இருக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பிரிட்டிஷார் ஏறக்குறைய 100 மைல் தூரம் முன்னேறியிருக்கின்றனர். யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன".

சமாதான நிபந்தனைகள் முடிவு செய்யப்படும்வரை பிரிட்டிஷ் படைகள் முன்னேறிச் செலுமென்று லண்டனிற் கூறப்படுகிறது. பிரிட்டிஷ் துருப்புகளின் முன்னேற்ற வேகம் குறைவாயிருப்பதற்குக் காரணம் அவைகளின் தேகக் களைப்பே தவிர வேறு எதுவுமில்லையென்று கூறப்படுகிறது.

மடகாஸ்கரிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:— தெற்கு நோக்கி முன்னேறும் பிரிட்டிஷ் படைகளுக்கு முதன் முதலாக எதிர்ப்புச்செவ்வாய்க்கிழமையன்று தான் ஏற்பட்டது. அன்று டிகோசுவாரஸிற்கு 170 மைல் தூரத்திலுள்ள குன்று ஒன்றைப் பிரிட்டிஷார் கைப்பற்றினர். எட்டு இயந்திரப் பீரங்கிகள் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் பொலிஸ்

வடமாகாணப் பொலிஸ் தலைவராகிய மிஸ்றர். சோயிஸாவும் உப பரிசோதகருள் ஒருவராகிய மிஸ்றர் தசநாயக்காவும் சமயோசிதமாகத் தத்தம் கடமையிலிருந்து நீக்கப்பட, மிஸ்றர். M.K. மனிங் என்பவர் வடமாகாணப் பொலிஸ் தலைவராகக் கடமை பார்க்கும்படி இப்பொழுது இங்கு வந்திருக்கின்றாரென அறியலானேம்.

புதிய ஒருசதம்

புதிய ஒரு சதநாணயம் இப்பொழுது உபயோகத்திற்கு வந்துவிட்டதென அறியலானேம் இதுதாமிரத்தினால் ஆக்கப்பட்டது; உருவத்தில் இப்பொழுது வழங்கும் சதத்தையொத்தது; கனத்தில் மாத்திரம் இப்பொழுதுள்ள சதத்திலுமபாதி நிறைமாத்திரங் கொண்டதாகும். இப்பொழுதுள்ள சதத்தோடு இப்புதிய சதமும் ஏககாலத்தில் வழங்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்டாலின்கிராட் அரங்கத்தில் மிக நெருக்கடியான சமயம்

சுற்றுப் புறத்தில் நாஜியர் பதுங்கியிருக்கின்றனர்

தகர்த்துச் செல்ல சத்துரு செய்த முயற்சி தோல்வி

காலநிலை ஜெர்மானியருக்குப் பாதகமாயிருக்கிறது

மொஸ்கோ செப் 17 வடமேற்குப் பகுதியிலிருந்து ஸ்டாலின் கிராடிற்குள் ஊடுருவிச் செல்ல ஜெர்மானியர் செய்த முயற்சிகளனைத்தும் தோல்வியடைந்தன வென்ற செய்தியொன்று கூறுகிறது. சோவியத் அரண்களை ஊடுருவிச் சென்ற ஜெர்மானியர் நகரின் வெளிப்புறத்திலுள்ள கட்டிடங்கள் சிலவற்றை ஆக்கிரமித்துக் கொண்டனர். ருஷ்யர் பின்பு பலத்த எதிர்த்தாக்குதல்கள் நடத்திச் சத்துருவை விரட்டி விட்டனர். அதன் பிறகு ஜெர்மானியர் நடத்திய தாக்குதல்கள் எல்லாம் முறியடிக்கப்பட்டன. ஆனால் ஜெர்மானியர் நகரின் சுற்றுப்புறங்களில் பதுங்கியிருக்கின்றனர். ஸ்டாலின் கிராடு துண்டிக்கப்படவில்லை. ருஷ்யர்களுக்கு உதவிப்படைகள் வந்த வண்ணமாகவே யிருக்கின்றன. சீதோஷ்ண நிலைமை மாறிவருவதே ஜெர்மானியர்களுக்குத் தடையாக இருக்கிறது.

ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:— ஸ்டாலின் கிராடின் வடமேற்குப் பகுதியில் நகரின் வெளிப்புறத்திலுள்ள வீடுகளில் ஜெர்மன் வீரர்கள் இருந்து வருகின்றனர். நகருக்குள் பிளந்து செல்ல ஏராளமான ஜெர்மன் டாங்கிகள் தயாராகவிருக்கின்றன. ஸ்டாலின் கிராடின் பாதுகாப்பின் மிக்க நெருக்கடியான சமயம் வந்துவிட்டது. ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருப்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும். ஜெர்மானியருக்கு இன்னும் விமான ஆதிக்கம் அதிகமாக இருந்து வருவது நன்கு தெரிகிறது.

ஸ்டாலின்கிராட் நகரம் தகர்க்க முடியாத கோட்டையாகச் செய்யப்பட வேண்டுமென்று "ரெட்ஸ்டார்" எழுதுகிறது. நெடுநாள் முற்றுகைக்குத் தயாராகவிருக்கும் பொருட்டு உணவு சப்ளை முதலிய விஷயங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அப்பத்திரிகை எழுதுகிறது.

தாக்குதல் முறியடிக்கப்பட்டன

இன்றிரவு வெளியான சோவியத் அறிக்கை கூறுவதாவது:-ஸ்டாலின் கிராடிற்கு வடமேற்குப் பகுதியிலும் மாஸ்டாக் பகுதியிலும் இன்று நமது துருப்புகள் கடுமையாகப் போரிட்டன. மற்றப்பகுதிகளில் மாறுதல் இல்லை.

15,000 ஜெர்மானியர் கொல்லப்பட்டனர்

குறித்த அறிக்கையின் அனுபந்தம் கூறுவதாவது:- ஸ்டாலின் கிராடின் வடமேற்குச் சுற்றுப்புறங்களில் கடுமையாகப் போர் நடைபெற்றது. பல ஜெர்மன் படைப் பிரிவுகள் ஸ்டாலின்கிராடின் வீதிகளை அடைவதில் வெற்றிபெற்றன. கைகலந்த போர் நடைபெற்றது. இன்று மாலையில் ஜெர்மன் படைப் பிரிவுகள் எல்லாம் திரும்பி விரட்டப்பட்டன. இங்கு இரண்டு நாள் யுத்தத்தில் 15,000 ஜெர்மானியர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

காலாட்படைகள் டாங்கிகள் விமானங்கள் ஆகிய எல்லாவற்றிலும் எண்ணிக்கை அதிகமாகவுள்ள ஜெர்மானியருடன் ஸ்டாலின்கிராட் வீரர்கள் கடந்த 23 நாட்களாகப் போர் புரிந்து வருகின்றனர். 20 ஜெர்மன் காலாட்படைப் பிரிவுகள 2000 டாங்கிகள் ஆயிரத்திற்கு மேற்பட்ட விமானங்கள் முதலியவைகளை எதிர்த்து ஸ்டாலின்கிராடைப் பாதுகாப்பவர்கள் உக்கிரமாகப் போராடி வருகின்றனர். ஸ்டாலின்கிராடைத் தகர்த்தெறிய ஜெர்மானியர் ஏராளமான விமானங்களைக் கொண்டு வந்திருக்கின்றனர். செம் படையினர் பருந்துப் பாய்ச்சல் விமானத் தாக்குதல்களை இப்பொழுது பொருட்படுத்துவதில்லை. அவர்களுக்குச் சேதம் அப்படி யொன்றும் குறைவாகவில்லாவிட்டாலும் ருஷ்யர் அகழ்களில் இருந்து கடுமையாகப் போரிடுகின்றனர்.

சோவியத் விமானிகளுக்கு வேலை அதிகமாக இருக்கிறது. அவர்களில் பலர் தினசரி நான்கு ஐந்து தடவைகள் ஆகாயத்திற்குக் கிளம்ப வேண்டியிருக்கிறது. போர் விமானங்கள் துணையுடன் வரும். ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களை அழிக்கச் சோவியத் போர்விமானங்கள் சதாகாலமும் நகரின்மேலேயே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன.

ஸ்டாலின் கிராடிலுள்ள நகரவாசிகள் போர்முனைக்காக இரவுபகலாய் உழைத்து வருகின்றனர். உணவுப் பொருட்களையும் யுத்த தளவாடங்களையும் கொண்டு ரெயில்கள் தினசரி வந்து கொண்டிருக்கின்றன. அடிக்கடி தாக்கப்பட்டாலும் அவைகள் பத்திரமாக வந்து சேர்ந்துவிடுகின்றன.

தேவை

நீர்வேலிச் செவ்வேள் ஐக்கிய பண்டக சாலைக்கு 1.10.42 தொடக்கம் ரூபா 500 ரொக்கப்பிணையுடன் மானேஜர் தேவை. சம்பளம் ரூபா 25. 28.9.42 க்கு முன் காரியதரிசிக்குமனுச் செய்க.

Mis 117 21&24-9-42

விளம்பரம்

வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் கணக்கப்பிள்ளை வேலைபார்த்து வந்த கு. சரவணைப்பெருமாள்பிள்ளையை 16.9.42 முதல் வேலையை விட்டு நீக்கிவிட்டபடியால் அவரிடம் இனிக் குத்தகைக் காசு முதலியவற்றைக் கொடுக்கக் கூடாதென்றும் கொடுத்தால் அதற்கு நான் பாத்தியமில்லையென்றும் இதனால் அறிவிக்கிறேன்.

சிவன்கோவில் வை. கண்ணம்மாள்
யாழ்ப்பாணம் டிறஸ்டி & மனேஜர்.
17.9.42

Mis 118 21-9 42

கடிதம்

கோணமாமலை வாசியின் குறுகிய நோக்கம்

சென்ற ஏப்பிறில் மாசம் 5-ந்௳ கொழும்பில் பகைவர்கள் குண்டு போட்டார்கள். மறுநாள் மாலை கோணேசருக்குச் சோமவாரப் பூசை செய்வதற்கு ஆயத்தமாய்க் கோவிற் பிராமணக்குருக்கள் சென்றார். அவரைப் பூசைசெய்யவிடாது அரசினர் தடுத்து விட்டார்கள். அவ்வாறு தடுத்ததற்கு, மேற்படி கோவிற் பூசை உரித்தாளர் பிரமஸ்ரீ தி. வில்வநாதக்குருக்களுக்கு அரசாட்சியார் எழுதிக்கொடுத்த உடன்படிக்கையின்படி அரசாட்சியாருக்கு முழு உரித்துமுண்டு. அடுத்தநாள் தொட்டு ஏறக்குறைய ஒருமாச காலமாய்க் கோவிற்பூசை நடைபெறாதிருந்தது. அப்போது மேற்படி கோவிற் பிராமணக்குருக்கள் கோவிற்பூசை இல்லாமலிருந்தபடியால், யாழ்ப்பாணம் போயிருந்தார். பின் அரசாட்சியார் மேமாசத்தில் அவ்விடம் வந்துநின்ற வெள்ளிக்கிழமைப் பூசைகாரராகிய பண்டாரத்தைப் பூசை பண்ணும்படியாக அறிவித்தார்கள். அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்த மேற்படி கோவிற் பிராமணக்குருக்களை அரசாட்சியார் மறுபடி பூசைசெய்ய உத்தரவு கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து ஆகஸ்டு மாசத்து முதற் சோமவாரத்திலேயே பூசையைத் தொடங்கி அன்றுமுதல் தமது பூசையைக் கிரமமாக நடத்தி வருகிறார்கள். இடைப்பட்ட பதினொரு சோமவாரப் பூசைக்குக் குறித்த பிராமணக்குருக்கள் பண்டாரத்துக்குப் பூசைசெய்ததற்குச் சம்பளமாக ரூபா 31 கொடுத்து அவரிடம் பற்றுச்சீட்டும் வாங்கியிருக்கிறார்கள்.

திருக்கோணமலையிற் குண்டு போட்டது ஏப்பிறில மாசம் 9ந்௳யாகும். அதற்கு முந்தியே அரசாட்சியார் பூசைசெய்ய விடாது தடுத்தபடியால பிராமணக்குருக்கள் திருக்கோணமலையை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள். குண்டுக்குப் பயந்து புறப்பட்டவரல்லர்.

இவ்வுண்மைகள் திருக்கோணமலை நகரபரிபாலனசபைத் தலைவர் அவர்களுக்கும் நலலாய்த் தெரியும். உண்மை இவ்வாறிருப்ப ஒரு நண்பர் (சைவனாயிருக்கலாம்) இந்து சாதனப்பத்திரிகையில் மேற்படி பிராமணக்குருக்களைப்பற்றிப் பலவாறாக இழித்துக் கண்டிக்கிறார். விஷயத்தை நன்கு அறிந்தபின் வெளியிடுவதே புத்தியின்பாற்படும்.

-கோணமாமலைவாசி-

பபிலோனியர் வானசாஸ்திரம்

(Babylonian Astronomy)

மட்டுவில் திருக்கணிதர்
சி. சுப்பிரமணிய ஐயர்

மத்தியாசியாவிலிருந்து இயூபிறெற்றிஸ் (Euphritis) ரைகிறிஸ் (Tigris) கரையோரங்களில் கி மு 2800 வரையில் குடியேறிய சாலத்தேயத்தவர்களும் (Chaldeans) வானசாஸ்திரத்தை ஊக்கத்துடன் வளர்க்கலாயினர். இதனாலேயே சாலதேயம் வானசாஸ்திரத்திற்குப் பிறப்பிடம் (Cradle of Astronomy) எனக் கருதப்படலாயிற்று. அங்கே வானசாஸ்திர ஆராய்ச்சிச் சாலை ஒன்றிருந்ததென்றும், அதில சில கருவிகள் வைக்கப்பட்டிருந்தனவென்றும், சாலதேய அரசர்களும் வானசாஸ்திரங்கற்று அதை ஊக்கப்படுத்தினரென்றும் கூறுகின்றனர். சூரிய சந்திரர்களுடைய சலனங்களையும், மற்றைய கிரகங்களின் சலனங்களையும் கி மு 2500-ம் வருடங்களுக்கு முன்னதாகவே அறிந்தனர். அயனசலனமும இவர்கள் அறிந்ததாகும் ஆனால் அதன் காரணம் அவர்கட்கு நன்கு தெரியவில்லை. இவையன்றி 19 வருடத்தில் 223 சாந்திரமாதங்களா நிகழ்வதையும், 19ம் வருடத்தில் முன்னர் நிகழ்ந்த கிரகணம் அதே விதமாகச் சம்பவிக்குமென்பதையு மறிந்திருந்தனர்; மேலும் நேரமறிவதற்கு ஜலகடிகாரம் (Clepsydra) அல்லது சூரிய கடிகாரம் (Sundial) பாவிக்கப்பட்டு வந்ததாகவும கூறப்பட்டிருக்கிறது.

எகிப்தியர் வானசாஸ்திரம்

(Egyptian Astronomy)

எகிப்தியர் (Egyptians) கிரேக்கர், அராபியர், என்பவர்களும் வானசாஸ்திரத்தை வளர்த்து வந்தனர். எகிப்தியர் கட்டிய பலகால் மண்டபங்களுள் (Pyramids) ஒன்றாகிய கிஸே (Gizeh) என்னுங் கட்டிடத்தின் அமைப்பை ஆராயுமிடத்து அவர்கள் கி மு 2250 வருடங்களுக்கு முன்னமே கணிதம் வானசாஸ்திரம் க்ஷேத்திர கணிதம் அளவை நூல் முதலிய நூல்களில் திறமைவாய்ந்தனராயிருந்தாரென்பது தெளிவாகிறது. இக்கட்டடத்தின் அடித்தளம் 480000 சதுர அடிகள் கொண்டதாகும. இது 20000 வேலையாட்களால இருபது வருடத்தின் பின கட்டி முடிக்கப்பட்டதாகும்.

இவர்கள் சூரியன் உதயமாகுங் காலத்தை நுட்பமாகக் கணித்தனர். இராசிச் சக்கரத்தையும நன்கறிந்தனர். நீல நதியில வெள்ளம பெருகுங்காலத்தை வைத்து ஆண்டின் எல்லையை அமைத்தனர். சோதிவட்டத்தால (Sothic Cycle) காலத்தைக் கணித்தறியும முறையையு மறிந்தனர். எவ்வாறெனில்:-

முப்பது நாட்கொண்ட பன்னிரு மாதங்களை ஓர் வருடமாகக் கொண்டனர். பின்னர் ஐந்து நாட்களை ஓர் மாதத்திலுஞ் சேராத மேலதிநாட்களாகக் கூட்டிக்கொண்டனர். $365\frac{1}{4}$ நாள் ஓர் வருடமாதலின், ஆண்டுத் தொடக்கத்திலே சூரியோதயத்தின் முன் கீழ்த்திசையிலே தோன்றிய ஒளி பொருந்திய நட்சத்திர மொன்று நான்கு வருடங்களின் பின் ஒருநாள் பிந்தித் தோற்றுவதை அவதானித்தனர். இந்நட்சத்திரத்தை எகிப்தியர் 'சோதி' யென வழங்கலாயினர். இது மேல்நாட்டாரால 'ஸீரியஸ்' (Serius) என்றும் இந்துக்களால் 'மிருகவியாதர்' என்றும் வழங்கப்படலாயிற்று.

இந்நட்சத்திரம ஒவ்வொரு நான்கு வருடத்திலும் ஒருநாள தள்ளித் தோற்றும். 1460 வருடங்கள் கழிந்தபின மீண்டும் வருடப்பிறப்பிலே தோன்றும். இக்கால வெல்லையை எகிப்தியர் 'ஒரு சோதி வட்டம்' என்று அழைக்கலாயினர்.

கிரேக்கர் வான சாஸ்திரம்

(Greek Astronomy)

வானசாஸ்திர வளர்ச்சிக்காக முற்காலத்தில் கிரேக்கர்கள் செய்த தொண்டு மிகப் போற்றத்தக்கது. இவர்கள் பூமி தட்டை வடிவமுடையதென்றும் அதைச் சுற்றிச் சூரியனுஞ் சந்திரனும், மற்றைய ஐந்து கிரகங்களும செல்வதாக ஆதியிற் கருதினர். நட்சத்திரங்கள் வெளிக்கோளத்தில் பதிந்திருக்கும பிரபையுடைய புள்ளிகளென எண்ணினர். பிதகொறஸ (Pythagoras 570—504 B.C.) எனபவர பிரபஞ்சம (Universe) உருண்டைவடிவுடையதென்றும், அது தனது நாராசத்தில் சுழன்று கொண்டிருக்கிறதென்றும், அந்நாராசமானது நிலையாயிருக்கும் பூமிக்கூடாகச் சென்றிருக்கிறதென்றுங் கூறினார். அனக்ஸகறஸ் (Anaxagoras—460B.C.) என்பவர் சந்திரன் சூரிய ஒளியைக் கொண்டு பிரகாசிப்பதாகக் கூறினார். யூடொக்ஸஸ் (Endoxos 407-255 B. C.) என்பவர் கிரக சுற்றோட்டத்தை நீசோச்ச விருத்த (Epicyclic Method) முறைபால் பூமியை மையமாகக் கொண்டு விளக்கினர்.

ஹெறக்கிலேட்ஸ் (Heraclides 388—315 B. C.) என்பவர் 24 மணித்தியாலத்துக் கொருமுறை பூமி சுழலுகிற தென்பதைத் தெரிவித்தார். அரிஸ்ராக்கஸ் (Aristarchus 310—250 B. C.) எனபவர் பூமி இப்பிரபஞ்சத்துக்கு மத்தியல்லவென்றும், சூரியனே மத்தியென்றும், பூமியும் மற்றைய கிரகங்களும்சூரியனைச்சுற்றிச் செல்லுகின்றனவென்றும உறுதிப்படுத்தினார். இவர் இவ்வாறு உறுதிப்படுத்தினாலும் கொப்பனிக்கஸ் (Copernicus-1473—1543) என்னும போலந்து (Poland) தேசத்து வானநூலறிஞர் பூமியும் ஐந்து கிரகங்களும சூரியனைச் சுற்றி வருகின்றன என்னுங் கொள்கையைக் கி பி 1543-ல் நிலைநாட்டும் வரைக்கும் அரிஸ்ராக்கஸின் கொள்கையானது அங்கீகரிக்கப்படவில்லை. எரர்தோஸ்தீன்ஸ் Eratosthenes 276—194 B. C.) எனபவர் பூமியின் சுற்றளவையும், கிராந்திச்சாய்வையும (Obliquity of theecliptic) கண்டறிந்தார். இதன பின்னர் ஹிப்பாக்கஸ எனபவர் (Hipparchus 160 B. C.) பினவரும அநுபவிஷயங்களைக் கண்டறிந்தார். அவையாவன:—

(a) வருடகால வெல்லையைத் தற்காலக் கணக்குக்கு ஆறு நிமிஷ வித்தியாசமளவில கணக்கிட்டார்.

(b) கிராந்திச்சாய்வு (Obliquity of the Ecliptic) 23 பாகை 51 கலை எனபதாகக் கூறினார். (ஆனால் அக்கால உண்மையான சாய்வு 23 பாகை 46 கலையாகும்.

(c) அயனாம்சம் (Precession) வருடமொன்றுக்கு 59 செக்கனெனக் கணக்கிட்டு, அதன் காரணத்தைச்சக்தி சாஸ்தி(Dynamics)ரத்தைக் கொண்டு விளக்கினார்.

(d) சந்திரலம்பனம் (Lunar Parallax) 59 மினிற் எனக் கூறினார்.

(e) சூரியவீதியின் பிறதிவிருத்த (Eccentric) வலைவு $\frac{1}{24}$ எனக் கண்டார். ஐந்து முக்கியமான கிரகங்களின் பரிவிருத்திக்காலங்களை (Synodical Peniods (f) யறிந்தார்.

ஹிப்பாக்கஸ் என்பவர் அரிஸ்ராக்கஸ் என்பவரால் கூறப்பட்ட சூரிய மத்திய கொள்கையை (Heliocentric hypothesis) அங்கீகரித்திருப்பின் தற்கால(Modern Astronomy) வானசாஸ்திர வளர்ச்சியானது அரிஸ்ராக்கஸின் காலத்திலேயே (அதாவது கி மு 300 வரையில்) ஆரம்பித்திருக்கும். புராதனகால வானசாஸ்திரிகளுள் மிகப் பிந்தியவர் தொலமி (Ptolemy A. D. 127-151) யாவர். இவர் இப்பிரபஞ்சத்துக்குப் பூமியே மத்தியெனனுங் கொள்கையுடன் தூரதர் சனியின்றி ஓர் நட்சத்திரப் பட்டிகையை வெளியிட்டார்.

வானசாஸ்திர மன்றிச் சோதிடசாஸ்திரம் (Astrology) என்னுங் கலையும் இவர்களாலே தொடங்கப் பெற்றதென்றும் பின்னரே இந்தியாவிற் பரவியதென்றும் சிலர் கூறுகின்றனர். ஏனெனில் பிற்காலத்தில் (விசேஷமாக அலக்ஸாண்டர் (Alexandar) முதலியோர் காலத்தில்) கிரீசுக்கும் இந்தியாவுக்கும் அதிக தொடர்பிருந்ததால, அக்காலத்தில் முறைகூறப்பட்ட வராஹமிஹிரே இந்தியாவிலிருந்து கிரீசுக்குச் சென்று சோதிடசாஸ்திரமும வானசாஸ்திரமும கற்றதாகக் கூறுகின்றனர்.

—வரும்.

அச்சுவேலி வியாபார சமுதாயம் (லிமிற்றெற்) அச்சுவேலி

அச்சுவேலி வியாபார சமுதாய (லிமிற்றெட்) மனேச்சர் 1942-ம் ஆ ஆக்கஸ்ற் ௴ 31-ந் திகதி ௸ சமுதாயத்திலிருந்து விலகிக்கொண்டார். இச்சமுதாயம் எவருக்காவது பணங் கொடுக்க வேண்டியிருந்தால், அவர்கள் வருகிற ஒக்டோபர் ௴ 15-ந் திகதிக்குள் ௸ சமுதாயக் காரியதரிசிக்கு அறிவித்தல கொடுக்க வேண்டும்.

இங்ஙனம்,
இ. தாமோதரம்பிள்ளை,
௸ சமுதாயக் காரியதரிசி.

Mis 115 17,21 & 24-9-42.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

† இசைத்தட்டு

செவ்வாய் செப் 22

காலை 7-15 கீதாரம்பம் † 7-20 தமிழில் செய்திகள் 7-30 இசைக்கதம்பம்† 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 வானொலி வாத்ய கோஷ்டி 8-25 டி வி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகானம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆ கிருஷ்ணன் தம்பு வீணை 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 ஆர். கிருஷ்ணன் தம்பி வீணை 5-45 இசைப்பயிற்சி 6-00 வானொலி வாத்யகோஷ்டி 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதாஸிலுள்ளபடி 9-00 கல்லும் சொல்லாதோ கவிதை! 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 9-45 பதம்-ஜாவளி † 10-00 ஒலிபரப்பு முடிவு.

புதன் செப் 23

காலை 7·15 கீதாரம்பம் † 7-20 தமிழில் செய்திகள் 7-30 சித்ரகீதம் † 8·00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 வானொலி வாத்யகோஷ்டி 8-25 ஸி. எஸ்.சாரதாம்பாள் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு

1-00 ஸ்வாதித்திருநாள் சாஹித்யங்கள் † 1-15 வாத்யகோஷ்டி † 1-30ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எச் எஸ் மத்வாசார் கோட்டுவாத்யம் 2-00 தமிழில செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 பி கே விஸ்வநாதசர்மா வயலின் 5 45 இசைப்பயிற்சி 6-00 ஸி எஸ் சாரதாம்பாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6·40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி நிகழ்ச்சி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7·45 பொருளாதார அமைப்பு 8-00 பி கே விஸ்வநாதசர்மா வயலின் 8-30 அமெரிக்க வாக்கு 8-45 கைத்தி 9-20ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10-00 ஒலிபரப்பு முடிவு.

வியாழன் செப் 24

காலை 7-15 கீதாரம்பம் † 7-20 தமிழில் செய்திகள் 7-30 படப்பாட்டுகள் † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 வானொலி வாத்யகோஷ்டி 8-25 பி ஏ நாகம்மா, பி ஏ கமலா பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே நாகரத்னம்மாள் புல்லாங்குழல் 2-00 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 டி கே நாகரத்னம்பாள் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6-00 பி ஏ நாகம்மா பி ஏ கமலாபாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை பாட்டு பி கே விஸ்வநாதசர்மா வயலின் உமயாள்புரம் கணேசய்யர் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 9-45 திரை இசை † 10-00 ஒலிபரப்பு முடிபு

ஹிந்து மகாசபையின் கோரிக்கை

வைஸ்ராய் நிராகரித்து விட்டார்

காவலில் வைக்கப்பட்டிருக்கும் காந்திஜீ முதலிய தலைவர்களுடன் ராஜீய விஷயமாகப் பேசுவதற்கு ஹிந்து மகாசபை செய்துகொண்ட கோரிக்கையை வைஸ்ராய் நிராகரித்து விட்டாரென்று தெரிகிறது.

சப்-இன்ஸ்பெக்டருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப், 16— சுன்னாகம் பொலீஸைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் எச். எம். ஷொக்மன் ஆகஸ்ட் மாதம் 10-ந் திகதி முதல் 13-ந் திகதிவரை தன்னைச் சுன்னாகம பொலிஸ் நிலையத்திலுள்ள ஓர் அறையில் தவறாக அடைத்து வைத்திருந்ததாகவும் சிவகுரு வேலுசாமி என்பவர் தொடர்ந்த வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு. வி. மாணிக்கவாசகர் நேற்றையதினந் தீர்ப்புக்கூறினார்.

முதலாவது குற்றச்சாட்டு விஷயமாக எதிரி குற்றவாளியென நீதிபதி தீர்ப்புச்செய்து எதிரிக்கு ரூபா 25 அபராதம் விதித்தார்.

நீதிபதி தமது தீர்ப்பிற் குறிப்பிட்டதாவது:- எதிரியின் சாக்ஷியம மிகத்திருப்திகரமற்றது. தப்பிக்கொள்ளும நோக்கத்தோடு சாக்ஷியத்தில பதிலளித்தபோதுங் குறுக்கு விசாரணையின்போது தடக்கப்பட்டதை மறந்துவிட முடியாது.

திருக்கோவையாரின் உவமைச் சிறப்புக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன மணம்? தெய்வ மணம். "தெய்வ மருவளர் மாலை" என்னும் அப்பகுதி எத்துணை இன்பம் பயக்கின்றது பாருங்கள்! அதன் நுண்பொருளை ஈண்டு நான் விரிக்க விரும்பவில்லை. தலைவியைத் "தெய்வமருவளர் மாலை" யாக்கிய ஆசிரியர் தலைவனையும் வாளா விடவில்லை. அவனையும் "அணி தில்லைச் சிவனடிக்குத் தாரணி கொன்றையன்" என்று உருவகித்து அவன் மாட்டுஞ் சிவமணம் வீசச் செய்துள்ளார். இவற்றைக் கருத்தூன்றிப் படித்ததும், பரவையாரைக் கண்டபோது நம்பியாரூரர் கூறும் கூற்றாக வுள்ள "கற்பகத்தின் பூங்கொம்போ" என்றற் றொடக்கத்துச் செய்யுளில் "சிவனருளோ" என்றும், அவ்வாறே நம்பியாரூரரைப் பற்றிப் பரவையார் கூறுங் கூற்றாகவுள்ள "முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ" என்றற் றொடக்கத்துச் செய்யுளில் "மின்னோர் செஞ்சடை யண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ" என்றுங் கூறுதற்கு இங்கிருந்து தான் சேக்கிழார் பெருமான் கற்றுக் கொண்டனரோ என்று நான் எண்ணினேன். என்ன தெய்வீக உவமை பாருங்கள்!

3 இவ்வாறே உயர்ந்த உவமைகளை எடுத்தாள்வதில் மணிவாசகர் ஒப்பற்றவர். உடன் போய தலைவியைத் தேடிச் செல்லும் நற்றாய், எதிர்வருவாரை நோக்கி "மான் போலும் நோக்கினையும், மயில் போலுஞ் சாயலையு முடைய மான் ஓர் ஏந்தலோடு நம்மெதிரே வரக் கண்டீரோ" என்று கேட்கின்றாள். அவர்கள், அவளை நோக்கி, "ஆம் அம்மணி! நீ சொல்லுங் கொள்கையரைக் குன்றத்திடைக் கண்டோம்; அவ்விருவருந் தம்முளியைந்து செல்கின்றார்கள். அவ்வாறு அவர்கள் மிக நெருங்கி அணைத்துக் கொண்டு செல்வதால், மின்னுகின்ற அவனது கழலும் அவளது சிலம்பும், அவனது வெண்பட்டும் அவளது செம்பட்டும் விளங்க ஒருவடிவை யொத்திருந்தன. ஆதலால், உடையாளொடு ஒன்றாக உள்ள சிவபிரான் போன்று—அம்மையப்பர் போன்று—அர்த்த நாரீசுர வடிவம் போன்று அவர்கள் இருந்தமையால், நாம் ஒருங்கு கூடி அவ்வழகைத் தொழ நினைந்தேம்" என்று அவர் கூறும் பகுதியை நோக்குங்கள்!

மின்றொத் திடுகழல் நூபுரம் வெள்ளைசெம் பட்டுமின்ன
ஒன்றொத் திடவுடை யாளொடொன் றாம்புலி யூரனென்றே
நன்றொத் தெழிலைத் தொழவுற்றன மென்னதோர் நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனமன்னை நீசொன்ன கொள்கையரே
— செ. 246.

இதில், "தலைவனுந் தலைவியுந் தழுவிக் கொண்டே (இக்காலத்தும் சில காதலர் உலாப் போதல்போல) போகும்போது, அவர்கள் காலெடுத்து வைக்குங்கால் ஒரு பக்கந் தலைவன் கழலும் மறுபக்கந் தலைவி சிலம்பும் விளங்க, ஒரு பக்கந் தலைவனது வெண் பட்டும் மறுபக்கந் தலைவியின் செம்பட்டும் மின்ன, அவர்கள் போகுங் காட்சி, சேய்மைக்கண் எதிரே வரும் எங்களுக்கு ஒரு பாதி அம்மையும் ஒரு பாதி அப்பனுமாக விளங்கும் எம் அம்மையப்பரையே நினைவூட்டிற்று. அவ்வழகை நாமெல்லாந் தொழவும் நினைந்தோம்" என்று சொல்லும் உவமை என்ன உயரிய-அழகிய-உவமை யென்று பாருங்கள். நினைதொறும் நினைதொறுஞ் சுவை பயக்கின்ற சிறந்த உவமையன்றோ என்று சொல்லுங்கள்!

இவ்வாறே **நிலைகண்டுரைத்தல்** என்னுந் துறையில் தலைவனைப் "பற்றொன்றிலார் பற்றுந் தில்லைப் பரங்குன்றி னின்ற புற்றொன் றரவன் புதல்வனே"டு ஒப்பிட்டுப் பேசுதலைக் காணலாம்.

"தில்லையானருள் போன்று அலராய் விளைகின்ற தம்பல் கைம்மிக் கைய மெய்ப்பருளே" (செய் 180) என்னும் உவமை எத்துணைச் சிறந்ததென்று சிந்தியுங்கள்! ஈசனருள் பெற்றார், உண்மை யுணராத பொது மக்களால், பித்தரென்றும் பேயரென்றும் மதிக்கப்பட்டும் நகையாடப்பட்டும் வருவதியல்பு. அஃது அந்த அலர் பரவுங் காலம். "சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப நாணது வொழிந்து நாட்டவர் பழித்துரை பூணதுவாக" என்றும் "நாடவர் நந்தமை யார்ப்ப வார்ப்ப நாமு மவர்தமை பார்ப்ப வார்ப்ப" என்றும் மணிவாசகப் பெருமான் திருவாசகத்தின் கண்ணே கூறுவனவற்றோடு ஒப்புநோக்கும்போது 'தில்லையான் அருள்போன் றலராய் விளைகின்றது" என உவமிக்கப்பட்டமை எத்துணைச் சிறப்பு வாய்ந்ததென்று சிந்தியுங்கள்!

இவ்வாறே **புனல்வர வுரைத்தல்** என்னுந் துறையில் முதிர் பொய்கையிற் புதுப்புனல் பாய்ந்தமை "தில்லையா னருளே போல் முதிர் பொய்கையிற் பாய்ந்தது புதுப் புனலே" (செ. 369) என்று கூறப்பட்டிருத்தல் மற்றோர் உயர்ந்த உவமையாகும். 326-ம் செய்யுளிற் கொண்டல் கருமால் விடையுடையோன் கண்டத்திற்கு உவமிக்கப்பட்டிருத்தல் பிறிதோர் உயர்ந்த உவமையாகும். 9-ம் செய்யுளில் "உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன் **குணந்தான்** வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடை" என்றது வேறோர் உயர்ந்த உவமையாகும். 11-ம் செய்யுளில் தில்லையம்பலம் பாடலரிற் றேம்பலஞ் சிற்றிடை" என்றது இன்னோர் உயர்ந்த உவமையாகும். இவ்வாறே

பொய்யுடை யார்க்கான் போலக லும்மகன் றாற்புணரின்
மெய்யுடை யார்க்கவ னம்பலம் போல மிகநணுகும்
(செ. 48)

மைத்தழை யாகின்ற மாமிடற் றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாகின்ற வன்பினர் போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா வினாய்க்கையில் வில்லின்றியே
பித்தழை யாகிற்ப ராலென்ன பாவம் பெரியவரே
(செ. 102)

தொத்தீன் மலர்ப்பொழிற் றில்லைத்தொல்லோனருளென்ன முன்னி
முத்தீன் குவளைமென் காந்தளின் மூடித்தன் னேளப்பாள்
ஒத்தீர்ங் கொடியி னொதுங்குகின் றாள்மருங் குல்நெருங்கப்
பித்தீர் பிணைமுலை காளெண்ணுக் கின்னும் பெருக்கின்றதே
(செ. 121)

தேன்றிக் கிலங்கு கழலழல் வண்ணன்சிற் றம்பலத்தெங் [நாண்
கோன்றிக் கிலங்குதிண் டோட்கொண்டற் கண்டன் குழையெழில்
போன்றிக் கடிமலர்க் காந்தளும் போந்தவன் கையனல்போல்
தோன்றிக் கடிமல ரும்பொய்ம்மை யேமெய்யிற் றோன்றுவதே
(செ. 325)

எனவரும் பகுதிகளிலுள்ள உவமைகளின் உயர்வை நோக்குக.

(வரும்)

கவனம்

1942-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ந் திகதிக்குப் பின்பு 50 சத (வெள்ளி) நாணயங்கள் செல்லமாட்டா. ஆதலினால் இப்பொழுதே அவைகளை மாற்றிக் கொள்ளுங்கள்.

G 27 21, 24 & 28-9-42

உடுவில் கிராம விருத்திச்சங்கம்

பொதுசனப் பாவிப்புக்காகத் தருமக்கிணறும்மடமும் திறப்பு விழா

"காற்று, வெளிச்சம், தண்ணீர் முதலியன கடவுளால் யாவர்க்கும் சமமாய் அளிக்கப்பட்டிருக்கின்றன" என வடமாகாண அரசாங்கத்தலைவர் திரு. M. பிரசாத் அவர்கள் மேற்படி திறப்புவிழாவிற் குறிப்பிட்டார்.

நிகழும் ஆவணித் திங்கள் 20-ம் திகதி சனிக்கிழமை (5-9-52) சாயந்தரம் நாலுமணிக்கு உடுவிலைச் சேர்ந்த மல்லம் என்னும் கிராமத்தில் திரு. கா. தனபாலசிங்கம் காலஞ்சென்ற தன்மனைவி அன்னம்மாவின் ஞாபக சின்னமாக அமைத்த கிணறும் மடமும் பொதுஜன பாவிப்புக்கென திரு. M. பிரசாத் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. வெகுசனங்கள் கூடியிருந்த அந்தச் சமயத்தில் திரு. கா. தனபாலசிங்கம் வடமாகாண அரசாங்கத்தலைவருக்கும் அவரோடு ஊர்வலமாக அழைக்கப்பட்ட அரசாங்கசபைப் பிரதிநிதி திரு. ச. நடேசன் அவர்களுக்கும் மற்றும் அங்கு கூடியிருந்தவர்களுக்கும் வந்தனோபசாரங் கூறிக் குறிப்பிட்டதாவது.

அடுத்த வருடத்திற் கிட்டத்தட்ட 150 ஏழைக்குடும்பங்கள் குடியிருக்கச் சொந்தமான நிலங்களில்லாதிருப்பதோடு பாவிப்பதற்குத் தண்ணீர் வசதியின்றித் தவிப்பதை நிவிர்த்திப்பதற்காக காலஞ்சென்ற தன்மனைவியின் ஞாபகசின்னமாகத் தான் இக்கிணற்றை கற்பாறை நிலத்தில் 27 அடி ஆழத்தில் தோண்டுவித்து 5 அடித் தண்ணீர் நிற்கக்கூடியதாகச் செய்ததினால் அவர்களுடைய தண்ணீர்ப் பஞ்சத்தை நீக்கியதாகவும் அதன் பக்கலில் ஓர் மடமுங்கட்டி, அதை அவர்களுக்கு வாசிகசாலையாக - இராப்பாடசாலையாக-வைத்தியசிகிச்சைக்குரிய இடமாக உதவும்படி விட்டிருப்பதாகவும் அத்தருமத்தை அரசாட்சியார் கைபேற்றுக் கிராமச்சங்க மூலமாயும, வைத்தியப்பகுதியார் மூலமாயும அவ்வசதிகளை அளிக்கும்படி வேண்டிக்கொண்டதோடு திரு. M பிரசாத் அவர்களை அத்தரும கைங்கரியத்தைப் பொதுஜன பாவிப்புக்காகத் திறந்துவைத்து ஆசீர்வதிக்கும்படியும் வேண்டிக்கொண்டார்.

அதன்மேல் யாவரும் மடத்தில் ஒருங்கு கூடியிருக்குமசமயம் தாகததுக்கு மதுரபானமும் தாம்பூலமும் வழங்கப்பட்டது. திரு. தம்பு பி. யூ. எல். J. P. அவர்கள் திரு. தனபாலசிங்கம் செய்த இத்தருமம் மற்றெல்லாத் தருமங்களிலும் தலைசிறந்ததென்றும் யாழ்ப்பாணத்தின் மற்றைய பாகங்களிலுமுள்ளவர்களும் இவ்வித தருமஞ்செய்ய முன்வரவேண்டும் என்றுங் குறிப்பிட்டார். அரசாங்கசபைப் பிரதிநிதி திரு. ச. நடேசன் அவர்கள் திரு. தனபாலசிங்கத்துக்கு நன்றி கூறி இவ்வித தருமஞ்செய்ய முன்வருவோர்க்குத் தானும் மற்றவர்களும் உதவியும் ஊக்கமும் அளிக்க கடமைப்பட்டவர்கள் எனக்குறிப்பிட்டார். கத்தோலிக்ககுரு வண. பிலிப்ஸ் பொன்னையா அவர்கள் அந்தஇடத்தில் தன் சபையைச் சேர்ந்த ஏழைகளுக்குத் தண்ணீர் வசதி உண்டாக்கிய திரு. தனபாலசிங்கத்துக்கு நன்றிகூறுவதற்குச் சுவாமி ஞானப்பிரகாசர் தன்னை அங்கு அனுப்பியதாகவுங்குறிப்பிட்டார். ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள் பலவகைப்பட்ட தருமங்களைப்பற்றி விரிவாகப்பேசி வடஇலங்கையிலுள்ள தனவந்தர்கள் தருமம் செய்யும் விஷயத்தில் திரு. தனபாலசிங்கத்தை ஓர் வழிகாட்டியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். அதன்மேல், தலைவர் திரு. M. பிரசாத அவர்கள் பேசுகையில் தானோர் இந்துசமயக் கொள்கையுடையவராயிருந்தும் கடவுளால்யாவருக்கும் சமமாயளிக்கப்பட்ட காற்று, வெளிச்சம், தண்ணீர் முதலியவை மேல்சாதியார் கீழ்சாதியார் என்ற கோதாவில வித்தியாசப்படவேண்டுமென இந்துசமய சாஸ்திரங்களில் கூறப்படவில்லையென்றும் திரு. தனபாலசிங்கம் இந்த அரிய தருமத்தை அர்ப்பணம் செய்த அவர் உத்தம மனைவி அன்னம்மாளின் ஆன்மா சாந்தியடையும்படி தான் பிரார்த்திப்பதாகவும், ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் உதவிசெய்ய எல்லோரும் முன்வரவேண்டும் என்றும அந்த மடத்தில்வாசிகசாலையும் மற்றைய வசதிகளும் செய்யவேண்டிய பொழுது தான் சிரத்தையெடுத்துக் கொள்ளுவதாகவும் குறிப்பிட்டார்.

கடிதம்

விவசாய மந்திரியின் பண்ணைப் பெருக்கு

அவர்கள் இலங்கை அரசாங்க சபையின் பிரதிநிதியாகிய திரு. சேனநாயக்கா விவசாய மந்திரியாக நியமிக்கப்பட்ட பின் செய்து வருகின்ற பண்ணை விருத்திகளை யாவரும் பாராட்டுகின்றனர். மின்னேரியாக் குளக்கரையிலும் இலட்சக்கணக்கான ரூபாவைச் செலவிட்டு ஒரு சில சனங்களைக் குடியேற்றினர். சென்ற 13-9-42ல் களுத்துறைப் பகுதியைச் சேர்ந்த மத்துகாமம் என்னுமிடத்தில் நடைபெற்ற பயிர்த்தொழில் விருத்திக் கூட்டத்திற்கு ஷ மந்திரியார் அவர்கள் சமுகமளித்து அங்குள்ள பண்ணைக்காரர்களைச் சந்தோஷப்படுத்திய செய்தி எல்லார் மனத்திற்கும் இனிமை கொடுக்கின்றது. 11 மண்வெட்டிகளையும் 34 கலப்பைகளையும் 11 கத்திகளையும் ஒரு சோடி எருமை மாடுகளையும் பரிசாக வழங்கினர்.

கூட்டத்திற் பேசும் பொழுது பயிர்த்தொழில் விருத்திப் படுத்துவதற்கே இவ்வித நடபடிக்கைகளை எடுத்துக் கொள்வதாகவும் கூறினாராம். மேற்குறித்த பகுதியில் இடைப்போக நெல்லு தகுந்தபடி விளைந்திருக்கிறதாம். களுத்துறை மேற்கு மணியகாரன் (இரட்டை மாத்தையா) திருப்பிக் கொடுத்த தொகை 90000. அப்படியானால் மற்றப் பகுதிகளிலும் ஏராளமான நெல் விளைந்தது நிச்சயம். இவ்விதமாக ஒவ்வொரு பகுதிகளையும் அரசாங்கத்தார் ஊக்கப்படுத்தி வைத்தால அரிசிப்பஞ்சம் எப்படித் தாக்கும்.

எமது மூதாட்டியார் "நெற்பயிர் விளை" என்றார். மந்திரியாரோ நெற்பயிரை விளைவிக்கவிளைகின்றார். இதுதான் நாடு சிறப்படையச் செய்யும் உதவி. "செயற்கரிய செய்வர் பெரியார்" என்ற வாக்கியத்தையுட எங்கள் மந்திரி அவர்கள் கைக்கொண்டொழுகுகின்றார்.

வடபகுதியிலுள்ள கிளிநொச்சி பரந்தன் முதலிய குளப்பாய்ச்சல் உள்ள இடங்களில உள்ளவர்களும மந்திரியாரின் பரிசுப் பொருட்களை எதிர்பார்த்துக் காணிகளைத் திருத்தி முன்னேறுவார்கள் தானே. பழம் பெருமை நிறைந்த பூநகரிப் பகுதியிலும் வானம் பார்த்த நிலங்கள் அநேகம் உண்டு. அங்குள்ள பண்ணைக்காரர்களும் மந்திரியாரின பரிசை எதிர்பார்ப்பார்கள் தாமே. நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் பாய்வதுபோல, எமது யாழ் கமவயற்காரர்களும் இடையிடையே குரக்கன் முதலிய தானியங்களை விதைத்துக் கொண்டு காவலிருக்கின்றார்கள். மந்திரியார் அவர்கள் கொடுக்கும் பரிசு காலபோகத்தில் இவர்களுக்கும் சேருமல்லவோ!

இங்ஙனம்,
சுதுமலை. ஆ. சி. நாகலிங்கபிள்ளை.

யாழ்ப்பாணத்திற்கு மந்திரிகள் விஜயம்

படகு விபத்து ஸ்தலத்தைப் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம் செப் 14

நேற்றைக்காலை யாழ்ப்பாணத்திற்கு வந்த தற்காலிக உள்நாட்டு மந்திரி திரு. ஏ. மகாதேவா இன்று பிற்பகல் கொழும்புக்குப் பிரயாணமானார். யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் பலர் மந்திரியைப் பேட்டி கண்டு பிரஸ்தாப ஜில்லாவில் பல பொலிஸ் ஸ்டேசன்களிலும் பொதுமக்கள் நடத்தப்படும் விதம்பற்றி பலமாகப் புகார் செய்து கொண்டனர்.

இன்று காலை, திரு. மகாதேவா போக்குவரத்து மந்திரி திரு. ஜே. எல். கொத்தலாவல பகிரங்கவேலைப் பகுதி டைரெக்டர், மாகாணத்தலைவர் ஆகியோருடன்சென்று பண்ணைப் படகையும், இப்பொழுது அமைக்கப்பட்டு வரும் வேலணை—புங்குடுதீவுத் தாம்போதியையும் பார்வையிட்டார்.

கடைசியாக உடுவில் கிராமவிருத்திச் சங்கத்தலைவர் திரு. வ. பொன்னுத்துரையவர்கள் யாவருக்கும் நன்றிகூறித் திறப்புவிழாவை இனிது முடித்தனர்.

அடுத்தநாள் அதேமடத்தில் திரு. தனபாலசிங்கம் அவர்களால ஆயிரத்துக்கு மேலான ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

—டிதம்

இந்தியாவிலிருந்து உணவுப்பொருட்களை வாங்குதல்

பூரணமாகப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது

திரு. கனகரத்தினம் பம்பாயிலிருந்து திரும்பினர்

இலங்கைக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்களை வாங்குவது சம்பந்தமான சில விஷயங்களைப் பற்றிப் பரிசீலனைசெய்யும்பொருட்டு பம்பாய்க்குப் போயிருந்த தற்காலிக ஆடிட்டர் ஜெனறல் திரு. கே. கனகரத்தினம் நேற்றைக்காலை தலைமன்னர் ரயிலில் கொழும்புக்கு வந்து சேர்ந்தார்.

அவர் வந்திறங்கியவுடன் நமது நிருபருக்குப் பேட்டியளிக்கையில தாம் பிரஸ்தாப விஷயத்தைச் சம்பூரணமாகப் பரிசீலனை செய்திருப்பதாகவும், தாம் தமது அறிக்கையைக் கூடியசீக்கிரம்தேசாதிபதியிடம் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

தாம் எவ்வாறு விசாரணை செய்தாரென்பதுபற்றி எவ்வித தகவலையும் தெரிவிக்க அவர் மறுத்தார். அநேகமாக, பம்பாயைச் சேர்ந்த சிலோன் ஹௌஸிலும், உணவுப் பொருட்கள் வாங்கப்பட்ட மற்றும் பகுதிகளிலும் தாம் பரிசீலனை செய்ததாகத் திரு கனகரத்தினம் கூறினார்.

இவர் இந்தியாவுக்குப் புறப்படுமுன் பம்பாயைச் சேர்ந்த 'சிலோன் ஹௌஸின' பழைய காரியதரிசியின் விண்ணப்பத்தின் பேரில், பூர்வாங்க அறிக்கை யொன்றை தேசாதிபதியிடம் சமர்ப்பித்ததாகத் தெரிகிறது.

நேற்றைக்காலை, டேபுடி ஓடிற்றர் ஜெனறல் திரு. டி. ஜீ. சிங்கநாயகமும் மற்றும் பல நண்பர்களும் திரு. கனகரத்தினத்தைக் கோட்டையில் சந்தித்தனர்.

சென்ற ஜூலை மாதம் 3ந்-தேதி திரு. கனகரத்தினம் இலங்கையிலிருந்து பிரயாணமானார்.

இவருடன் பம்பாயை சேர்ந்த புதிய தற்காலிக இலங்கைவர்த்தகக் கமிஷனர் திரு. அன்னெஸ்லிடி சில்வாவும் "சிலோன் ஹௌஸைச் சேர்ந்த பழைய காரியதரிசி திரு. மேடிவாகேயும் சென்றனர். திரு. மேடிவாகே சென்றவாரம் கொழும்புக்குத் திரும்பினர். திரு. டி. சில்வா 'சிலோன் ஹௌஸின' நிர்வாகத்தை நடத்தி வருகிறார்.

வேண்டுவன வேண்டாதன

1-ம் பக்கத் தொடர்ச்சி

விதிமாளுமட்டும்
ஏதுக்கிவர் பிறந்தாரிறைவா
கச்சியேகம்பனே"

என்றும் கூறுகிறார்.

பொதுவாக நாம் நோக்குமிடத்து உலகில் நமக்கென ஏதாவது ஒரு பொருளில்லை. நாம் விரும்பும் நம் பொருள், நம் மக்கள் என நச்சி ஆசைகொள்வதல்லாது வேறொன்றுமில்லை. மனைவி மக்களாவது, மாடு கன்றுவது, வீடு வாசலாவது, சுற்றமாவது ஒன்றும் நம்முடன்வர மாட்டா. ஈற்றில் நமக்குத் துணை புரியவும் மாட்டா.

ஆதலின் நாம் உலகத்தில நமக்கு ஒரு பொருளும் சொந்தமுள்ளதாக இல்லையென்பதையும், மண், பெண் பொன் இவைகளில் அளவுக்கு மிஞ்சி ஆசை வைத்தல் மிகவும் மடமையென்பதையும் தெரிந்துகொண்டோம். இனிச் செய்ய வேண்டுவன எவையென நோக்குவாம்.

"அற்புத யாயிந்த வுடலாவி படக்கு முனம சற்குருவைப் போற்ற வேண்டும" திரிபுரமெரித்த முக்கண்ணனை நாடோறும் போற்ற வேண்டும். அவரை உளத்தமைத்துப் பண்ணும் பதிகங்களைப் படிக்க வேண்டும். அப்பர் சுவாமிகள கூறியவற்றைத் தெளிந்து கண்டு அதனவழியொழுகவேண்டும்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல்
நெஞ்சேநீவா நித்தலு மெம்பிரா
னுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு
மிட்டுப் பூமாலை புனைந்தேத்திப்
புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றிபோற்றியென்று
மலைபுனல்சேர் செஞ்சடை எம்மாதீ
யென்றும் ஆரூரா வென்றென்றே
அலறுநில்லே"

என்பது.

ஞானத்தின் கரைகண்டு பிறபற்றுகளை வேருடன் களைந்த மாணிக்கவாசகர் தாம் வணங்குவது இறைவனுக்குப் போதாது என நெஞ்சை இழித்துக் கூறுகின்றார்.

"ஆடுகின்றிலை கூத்துடையான்
கழற்கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும்
செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறலறிலை
செய்வதொன் றறியேனே"

என்றவிடத்து நாம் வணங்கும் சொற்ப நேரத்திலாவது சிந்தையை ஒருவழிப்படுத்தி எம்முடைய நெஞ்சத்திலிருந்து எழுகின்ற அன்பு வெள்ளம், சிவபிரானது நெஞ்சைக் கரைக்கச் செய்ய வேண்டும். நாமனைவரும் மனமொழி மெய்கள் ஒருமித்துக் கடவுளை மனதார வணங்க வேண்டும். (ஒருவருக்காக இன்னொருவர் செய்ய முடியாத காரியங்களில் இறைவனை வணங்குதல் பிரதானமானதாகும்.) அற்றார் பசிதீர்க்க வேண்டும். பட்டினத்தடிகள், மாணிக்கவாசகர் முதலிய கடவுட்டன்மை வாய்ந்த அன்பர்கள் திருவாய் மலர்ந்தருளிய பாசுரங்களைப் பலமுறையும் பாராயணம் செய்ய வேண்டும். (வெறும் சக்கை நிறைந்த நவல்ஸ்களை வாசிக்கப்படாது.) உலகத்தவர்களுக்கு எளிதில் விளங்கக்கூடிய மேற்கூறிய பக்த சிகாமணிகளின், கடவுட்டன்மை வாய்ந்த அரிய பாக்களை எக்காலும் சிந்தித்துத் தெளிய வேண்டும் என மீண்டுமொருமுறை கூறி முடிப்போம்.

"வேண்டுதல் வேண்டாமை
யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில"

வங்கியம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வெண் ஜம்மடங்காகி அதியுச்சகாந்தாரத்தினைத் தரும். ஆதலினாலே குழலோசையிலே ஷட்ஜம பேசும்போது பஞ்சம காந்தாரங்களும் உடன்றோன்றி இசையினை இனிமை செய்கின்றன என்னும் உண்மை கணிதத்தின் வாயிலாகப் பெறப்படுகின்றது.

—செந்தமிழ்.

விஜய யோகம்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

த்திகை மாசங்களில் சூரியன் அஸ்தமிக்கத் தொடங்கும் காலமும் கோதூளிகாலமென்று சொல்லப்படும். சூரியனுடைய உதயலக்கினத்திற்கு ஏழாமிராசி கோதூளி காலக்கினமென்றும், அந்த லக்கினத்தில் விவாகஞ்செய்தால் சந்தானவிருத்தியைக் கொடுக்குமென்பர். செங்கதிர்மேல் பாதிசென்று செஞ்சுடர் விசயம் வாரிதங்கிய வேலைதன்னைத்தக்கோதூளியென்பர். அங்கதிற் சௌளமுஞ்சியருமணமன்றியாவும் மங்கைபே செய்யலாகுமென்றனர் மறைவலோரே.

என்ற பிரமாணப்படி சௌளம் உபநயனம் விவாகம் தவிர ஏனைய எல்லாச் சுபகருமங்களும், செய்யலாமெனக் கூறப்படுகிறது. கிழக்குத் தேசத்தவர்கள் கலிங்க தேசத்தவர்களுக்குமாத்திரமே கோதூளிகா காலம் விவாகத்திற்கு மிக உத்தமமென்றும், ஏனைய தேசவாசிகட்கு விவாகஞ்செய்வதற்கு உத்தமமல்லவென்பதையுமறிக.

விஷ்டி பத்திரை, ரிகசத்தி, திதிசுத்தி, சங்கிராந்தி பலமில்லாதபோதும் அவசிய சுபகருமங்கள் செய்யவேண்டின கோதூளிகா காலத்தில் செய்தால் எல்லாக்குற்றங்களும் நீங்கும். மார்கழி, மாசி மாசங்களில் வரும் கோதூளிகா காலம் மிகவும் குற்றமுடைத்தாம்,

கோதூளிகா காலத்தில மேற்குத் திசையிலும் இரவில் வடக்குத்திசையிலும இரவில் வடக்குத் திசையிலும் பிரயாணஞ் செய்யக்கூடாது. உஷத் காலத்தில் கிழக்குத்திசையைத்தவிர ஏனைய திசைகளில் பிரயாணஞ்செய்ய நினைத்துப்போன அலுவல் கைகூடும். கோதூளிகாகாலத்தில் மேற்குத் திசையைத் தவிர ஏனைய திசைகளில் பி யாணஞ் செய்யின் சகல நன்மைகளுமுண்டாம்:

தங்கள் கருமங்களை ஆவசியமாகச் செய்யவேண்டின கோதூளிகா காலத்தில் செய்யலாம். நீண்டாச்சாதியார் இக்கோத்தில் விவாகஞ் செய்யலாமென்றும் மேற்குலத்தவர்கள் செய்யக்கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

"சாசோதிமாலை" நூலுடையார் இதனை விளங்காமல் பொதுவாகச் சொல்லிவிட்டனர் போலும்.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எசசநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Y164 A. 21-11-41—20-11-42 (தி)

பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு எப்பிறில் மாதந் தொடக்கமாக
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்
தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்
சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச் சிறிது உயர்த்தியுள்ளார்:-

இந்துசாதனம் தமிழ்ப்பிரதி	வருடமொன்றிற்கு	பட்டின எல்லையுள்	6.50
,, ஆங்கிலப்பிரதி	,,	,,	6.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	10.50
தமிழ்ப்பிரதி	,,	பிறவூர்கட்கு	9.50
ஆங்கிலப்பிரதி	,,	,,	9.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	13.50

தனிப்பிரதி 7 சதம்

வெளிவந்துவிட்டது!
சைவ சித்தாந்த உண்மை

சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பயிலவிரும்பும் ஆங்கில மாணவருக்கு இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியமுறையில், "விஞ்ஞான சாத்திர மாணவ" ரொருவரால் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்திற் காலந்தோறும் எழுதி வெளியிடப்பெற்று வந்தது; இதனை இப்பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் தொகுத்துப் புத்தகவடிவிற் பலர்க்கும்பயன்படும் வண்ணம அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இது பதினைந்து அதிகாரங்களைக் கொண்டது; திருவாளர் சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிய நூன்முகத்தோடு கூடியது. 1 0 பக்கங்கள் வரையிற் கொண்டது. சைவமக்களெல்லாரும் இலகுவில் வாங்கிப் படிக்கவேண்டுமென்ற நோக்கம்பற்றிப் பிரதியொன்று விலைகுறைத்து 5 சதமென விதிக்கப்பட்டுள்ளது. பெறவிரும்புவோர், மனேஜர், யாழ்ப்பாண சைவப்பிரகாசயந்திரசாலை, வண்ணார் பண்ணை என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரொப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4-3-42—3-3-43

யாழ்ப்பாணம்
சைவ பரிபாலன சபையார்
வெளியிட்ட பாலபாடங்கள்
(முதற்றெகுதி)

1. சிறுபிள்ளைப் பாடம்: (சித்திரசகிதமானது) குழந்தைகள் ஆரம்பத்திற்பயில வேண்டியதாகிய இப்புத்தகம் புதிய முறையில், சித்திரங்கள் செறிந்ததாய் நுட்பமாகப் பெரிய எழுத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பிரதிகள் விரைவிற் சேதமுறாதபடி தடித்த மட்டையிட்டுக் கட்டப் பெற்றுள்ளது. விலை சதம் 15.

2. முதற்பாலபாடம்: பல்லாயிரக் கணக்காக வருடந்தோறும் அச்சிடப்படுவது. சித்திரங்கள் விரவியதாய்ப் பெரிய எழுத்தில் அச்சிடப்பெற்றுள்ளது விலை சதம் 12.

3. இரண்டாம் பாலபாடம்: சித்திர சகிதமானது; செய்யுட்பாடங்கள் அரும்பத விளக்கம் முதலியவற்றுடன் கூடியது. விலை சதம் 25.

4. மூன்றும் பாலபாடம்: சித்திரசகிதமானது; செய்யுட்பாடம், அரும்பத விளக்கம், செய்யுள்கட்குஉரை முதலியவற்றைக் கொண்டது. விலை சதம் 30

5 நான்காம் பாலபாடம்: சித்திரசகிதமானது; அரிச்சந்திரன் கதை முதலிய சிறந்த கதைகள், சிறுவர்க்கு அறிவையூட்டும் ஏனைய பாடங்களும், நீதி நூற்செய்யுட்களும், அரும்பத விளக்கம், செய்யுட் பாடங்களுக்குப் பதவுரை முதலியன கொண்டது. விலை சதம் 40.

6 ஐந்தாம் பாலபாடம்: சித்திரசகிதமானது; ஸ்ரீராமர், நளன் முதலியோருடைய சரித்திரங்களை விரித்துக் கூறுவது. செய்யுட்பாடம், நீதிநூல், அரும்பத விளக்கம், செய்யுட்பாடவுரை யென்னு மிவைகளைக் கொண்டது. விலைசதம் 50.

7 ஆறும் பாலபாடம்: சாவித்திரி சரித்திரம், குமணசரித்திரம் முதலிய பல அரிய பாடங்களைக் கொண்டது. அரும்பதவிளக்கம், செய்யுட்பாகம் முழுவதற்கும் உரையென்னு மிவைகளோடு கூடியது. விலை சதம் 60.

8 ஏழாம் பாலபாடம்: பாண்டவர் நாட்டிற் கரந்துறைதல் முதலான சரித்திரங்களையும், பல அரிய விடயங்களையும், செய்யுளிற் சாவித்திரி சரித்திரத்தையும் இன்ன பிற அரிய விஷயங்களையும், அரும்பதவிளக்கம், செய்யுட்பாடவுரை ஆதியனவற்றையும் கொண்டது. விலை சதம் 70.

9 எட்டாம் பாலபாடம்: வசனபாகம், செய்யுட்பாகம் என்னு மிருபாகமாகப்பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. உயரிய செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள்ளது. அரும்பத விளக்கம், செய்யுட்பாகவுரை முதலியன அடங்கியுள்ளது. விலை சதம் 85.

11. செந்தமிழ்க்கருவூலம். உரையுடன். இது தமிழ்-ஆங்கில கலாசாலைகளில் 7-ம், 8-ம், S. S. C. மற்றிக்குலேஷன் வகுப்புக்கட்கு இலக்கியவாசகமாக உபயோகிக்கத் தக்கது. விலை சதம் 35.

மனேஜர் சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

பிரதானமான அறிவித்தல்
லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்றர். S. சாஸ் பத்திராணு
இப்போது கிறைஸ்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறார்.
இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை அங்கு இருப்பார்.
ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக
தம்பராவாத் தோட்டம், வரியப்பொலா, வடமேல்மாகாணம்.
Y115 18-8-42—17-11-42

விளம்பர விகிதம்

முதன் முறைக்கு
ஒரு கலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 5-50
கால் கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூ. 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்பட மாட்டா.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Monday 21st September, 1942